# தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் லண்டன் மாநாடு மார்ச் மாதம் 24ம்,25ம் திகதிகளில் நடைபெறும்

[லண்டன்]

தமிழீழ ஆய்வு நிறுவனம் நடத்தும் 'தமிழீழ அடிமட்ட பூர்வாங்க வேலை, ஆய்வும் அபிவிருத்தியும்' எனனும் தலைப்பிலான மாநாடு மார்ச் மாதம் 24ம், 25ம் திகதிகளில் லண்டனில் நடைபெறவுள்ளது.

தமிழ்ப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதே இம்மாநாட்டின் நோக்கம் என்று மாநாட்டு அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் நிலவுகின்ற உண்மையான அரசியல் நிலை, கலாசார விஷயங்களைக் கருத்

(8-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 16 ஷஃபான் பிறை: 2 இதழ்: 15
யாழ்ப்பாணம் புதன்கிழமை 28-02-1990

## அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழித் தினம்

(உடுவில்)

இலங்கையில் வெவ்வேறு பிரதேசச் சூழலில் வாழும் தமிழ்மொழி மூலம் கல்வி கற்கின்ற சகல பாடசாலை பிள்ளைகளும் தமிழ்மொழி விழாவில் பங்குபற்ற வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்ற கல்வி, கலாசார அலுவல்கள் தகவல்கள் அமைச்சின் கொள்கைக்கு அமையக் கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு, அகில இலங்கை ரீதியிலான தமிழ்

(8ம் பக்கம் பார்க்க)

# "இந்திய அமைதிப்படை ஈழம் வந்ததன் நோக்கம் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் போராட்டத்தை ஒடுக்கவுமே!"

## நெடுமாறன் குற்றச்சாட்டு!

(நமது அலுவலக நிருபர்)

**"இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டதன் நோக்கம் தென்கிழக்காசியாவில் இந்தியா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவும், தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை முற்றுக ஒடுக்குவதற்காகவுமே" என்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் திரு. பா. நெடுமாறன் 'ஈழநாடு'வுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் குற்றம் சாட்டினர்.**

'ஈழநாடு' அலுவலகத்துக்கு நேற்றுக் காலை திரு. நெடுமாறன் விஜயம் செய்திருந்தபோது மேற்படி பேட்டியை அளித்திருந்தார்.

**புதிய சூழ்நிலையில் பேச்சுவார்த்தை**

இப்பேட்டியில் திரு. நெடுமாறன் தெரிவித்ததாவது:

''தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகள் மதிக்கப்படவில்லை. ஆனல் இப்போது தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்

(8 ம் பக்கம் பார்க்க)

## அப்பியாசக் கொப்பி உற்பத்தி பெரும் வீழ்ச்சி

[மட்டக்களப்பு]

வாழைச்சேனை காகித ஆலையில் அப்பியாசக் கொப்பி உற்பத்தி கடந்த வருடத்தில் 27 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இத்தகவலை வாழைச்சேனை காகித ஆலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைதியற்ற சூழ்நிலையும், கடந்த வருடத்தில் இருமாதங்கள் தொடர்ந்து வடக்கு-கிழக்கில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தமையுமே இந்த உற்பத்தி வீழ்ச்சிக்கு காரணம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

1988ம் ஆண்டு 66,000டசின் அப்பியாசக் கொப்பிகள் உற்பத்தி செய்யப்பட்டது. 1989ம் ஆண்டில் 48,100 டசின் அப்பியாசக் கொப்பிகள் மட்டுமே உற்பத்திசெய்யப்பட்டது. இவ்வருடம் இரு மாதங்களில் 10,500 டசின் கொப்பிகள் உற்பத்திசெய்யப்பட்டது. காகித உற்பத்தியும் 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு உயிரியல் தொழில்நுட்ப விஞ்ஞானத்தை ஸ்கொட்லாந்து பல்கலைக்கழகம் வழங்கும்

### - பேராசிரியர் றேபேர்ட் ஸ்ற்றேஜன்

(யாழ்ப்பாணம்)

ஸ்கொட்லாந்து ஹேரியற் உவாற் பல்கலைக்கழகம், வடபகுதி மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு உயிரியல் தொழில்நுட்பவிஞ்ஞானத்தை வழங்கும். இத்திட்டம் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும்

ஸ்கொட்லாந்து ஹேரியற் வாற் பல்கலைககழகத்தைச் சேர்ந்தபேராசிரியர் றெபேர்ட் ஸ்ற்றேஜன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய விரிவுரையின்போது இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விரிவுரைக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினர்.

றேபேர்ட் ஸ்ற்றேஜன் உரையாற்றுகையில், நான் வடபகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, இங்குள்ள தேவைகளை நன்கு அறிந்துகொண்டேன். உயிரியல் தொழில்நுட்ப விஞ்ஞானம் இங்கு அவசியமாகத் தேவைப்படுவதை உணர்ந்துள்ளேன். விரிவான அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகததுடன் இணைந்து செயற்படுவதற்கு விருப்பமாக உள்ளேன்'' என்ருர். (12)

## நெடுமாறன் ஆறுதல் கூறினர்

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிப்படையின் நடவடிக்கையின்போது யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியில் உயிரிழந்த பேராளிகளின் தாய்மார்களை திரு. பா. நெடுமாறன் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இச்சந்திப்பு நேற்றுமுன் தினம் மாலை யாழ்ப்பாணம்

(8ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் டென்மார்க் கிளை

(டென்மார்க்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க்கிளை சுதந்திரமாக இயங்க டென்மார்க் அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் அண்மையில் அரசியல் கட்சியாக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பின்னரே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## வாகனப் பதிவுமுறை நடைமுறைக்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

1990-ம் ஆண்டுக்குரிய லைசென்ஸ், இன்சூரன்ஸ், மோட்டார் வாகன சம்பந்தமான பதிவுப் பத்திரங்கள் இல்லாமல் வாகனங்களைப் பதிவு செய்ய முடியாதென சம்பந்தப்பட்ட இறைவரிக் கிளை உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, காப்புறுதிக்கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டபோது ''இன்று தொடக்கம் வாகனங்களுக்கு 'இன்சூரன்ஸ்' வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கார்களுக்கு 230 ரூபா 60 சதமும், மோட்டர் சைசிக்கிள்களுக்கு 146 ரூபா 30 சதமும் லொறிகளுக்கு 288 ரூபா 50 சதமும் கட்டணமாக அறவிடப்படுகின்றது. மினி பஸ்களுக்கு ஆசனங்களைப் பொறுத்துக் கட்டணம் அறவிட ஏற்பாடாகியுள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## பீகார் தேர்தல் வன்முறையில் 60 பேர் மரணம்; 150 பேர் காயம்!

(புதுடில்லி)

பீகார் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற வாக்குப்பதிவின்போது இடம்பெற்ற வன்செயலினுல் 60 பேர் கொல்லப்பட்டதுடன், 150 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இங்குள்ள பல்வேறு இடங்களில் துப்பாக்கிச் சூடு, குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அரசியல் கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற மோதல்களிலேயே பலர் இறந்தும் காயமடைந்தும் இருப்பதாகத் தெரியவருகிறது.

பீகார், இமாசல் பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினுல் சில வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு பாதிக்கப்பட்டிருந்தது.

வாக்குப் பதிவு பாதிக்கப்பட்ட இடங்களில் இன்று மறு வாக்குப் பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

8மாநிலங்களுக்கும், புதுவை யூனியன் பிரதேசச் சட்டப் பேரவைகளுக்கும், ஒருசில நாடாளுமன்றத் தொகுதிகளுக்குமான வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது.

5 கோடிக்கும் அதிகமான மக்கள் நேற்றைய வாக்குப் பதிவின்போது வாக்களித்தனர்.

## மக்கள் வங்கி 2-ம் கட்ட கொடுப்பனவு 3 ம்திகதி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி யாழ். பிரதான வீதிக்கிளையில் மார்ச் மாதம் 3-ம் திகதி சனிக்கிழமை வல்வெட்டி கிராமசேவகர் (ஜே 184) பிரிவைச் சேர்ந்த 982 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் இரண்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அரிசி ஆலைக்குரிய சிப்டர், பொலிசர், மோட்டர், அலர் முதலியன விற்பனைக்குண்டு கிறவுண் மில், ஸ்ரேஷன் ரோட், கிளிநொச்சி. (சி 3539)

### தேவை

கணக்காளர் ஒருவர் யாழ். நகரில் உள்ள ஒரு விற்பனை ஸ்தாபனத்திற்குத் தேவை. வருமான வரி, B. T. T. போன்ற வேலைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் இருபாலரும் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 571, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (ஏ 571)

விற்பனை நிலையம் ஒன்றுக்கு வேலை செய்வதற்கு 20 வயதிற்குட்பட்ட ஊழியர்கள் தேவை. வியாபாரம் சம்பந்தமான விடயங்கள் அனுபவமுள்ளவர்களால் கற்றுக் கொடுக்கப்படும். ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 572, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (ஏ 572)

பிரபல விற்பனை நிலையம் ஒன்றிற்கு காசாளர் (Cashier) தேவை. ஆங்கில அறிவுள்ளவர்களும், முன் அனுபவம் உள்ளவர்களும், யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கவும் முடிவு திகதி 05-03-90. பிணைப்பணம் கட்டவேண்டும். விளம்பர இல. 570, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (ஏ 570)

# "தீயசக்தியாக மாறிய அமைதிப்படை" - நெடுமாறன் கண்டனம்

(புங்குடுதீவு)

''தமிழ் ஈழ மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தமிழ்ஈழ மண்ணை மீட்கவும் களத்தில்நின்று போராடி சாதனைகள் படைத்துவரும் தமிழ்ஈழவிடுதலைப் புலிகளுக்கு எனது மனநிறைவுடனான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். போராட்டங்கள் எத்தனையோ பல நாடுகளில் நடைபெற்று வருவதை நாம் காண்கின்றோம். ஆனால் இங்கு விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்தி வருவது மேன்மையானதும் உறுதியானதுமாகும். இவை அனைத்தும் வரலாற்றில் எழுதப்படவேண்டிய மகா பொக்கிஷங்கள்''

இவ்வாறு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விடுதலைப்புலிகளின் கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும், தமிழ்நாடு மக்கள் முன்னணி தலைவருமான திரு. பா. நெடுமாறன் குறிப்பிட்டார்.

திரு ஐ. சண்முகநாதன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. பா. நெடுமாறன் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில். ''இலங்கை மக்களுக்கு அமைதியைத் தேடித் தரவந்த அமைதிப்படை அழிவுப்படையாக மாறியுளளது விடுதலைப்புலிகளையும் மக்களையும் அவர்களது சொத்துக்களையும் அழிக்கவந்த தீய சக்தியாக அது மாறியுள்ளது'' என்றார்.

இவ்வைபவத்தில் ப. கனகலிங்கம். வி அன்ரனி மரியதாஸ், ஆலடிக்காந்தன். சு. கருணாகரன், ஏ. துரைசிங்கம் உட்பட பலர் உரையாற்றினார்கள். த. சுந்தரமூர்த்தியின் விடுதலைக் கவியுடன் கூட்டம் முடிவுற்றது.

## யாழ். பல்கலைக்கழக 'உபவேந்தர் ,வெளியீட்டு நிதி'க்கு உதவுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் வெளியீட்டு நிதிக்கு நலன் விருமபிகள் உதவுமாறு யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் கேட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்: பட்டப்பின்படிப்பு மாணுக்கர் ஆகியோரின் அரிய ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுவதற்குப் போதிய நிதிவசதி இல்லை இதனுல் எமது பிரதேச சமூக, கலாசார, பொருளாதாரவளர்ச்சிக்கான இந்த ஆய்வுகளை வெளியிடுவதற்கான நிதியை வழமையான பல்கலைக் கழக மானியக்குழு வழங்கும் நிதியிலிருந்து போதியளவு ஒதுக்கமுடியாதுள்ளது. எனவே 'உபவேந்தர் வெளியீட்டு நிதி' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நலன் விரும்பிகள் தாராளமாக இந்நிதிக்கு வழங்கும்படி கேட்கப்படுகின்றனர்.

நிதிவழங்கவேண்டிய முகவரி; கணக்சாளர், யாழ். பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# எழுத்தாளர்களுக்கு பணப்பரிசு

(யாழ்ப்பாணம்)

''அநேகபடைப்பாளிகளின் வாழ்க்கை, கஷ்டத்திலேயே அமைந்திருக்கிறது. அவர்களுக்கு, பண்டைக் காலத்தில் அரசர்கள் புலவர்களை ஊக்குவித்தது போன்று, எனது அமைச்சும் இக்காலப் படைப்பாளிகளுக்கு நிவாரணம் கொடுத்து அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அளிக்க வேண்டும் எனஎண்ணியுள்ளது. அவர்கள் இந்தப் பணத்தைக் கொண்டு தங்கள் கஷ்டத்திலிருந்து மீள வேண்டும்''.

பழம்பெரும் எழுத்தாளர்கள் வ. அ இராசரெத்தினம், ஏ. வி. பி. கோமஸ் ஆகியஇருவருக்கும் பணப்பரிசில்களை வழங்கி உரையாற்றிய இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ்இவ்வாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ''இப்பரிசில்கள் ஐவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இன்னும் பலபேருக்கு வழங்கவும் எண்ணியிருக்கிறோம்'' என்றார்.

இந்த வைபவத்தில் ஈழத்துச் சோமு, திரு. எஸ். சந்திரசேகரன் போன்ற எழுத்தாளர்களும் பங்குபற்றினுர்கள்.

(ம)

# "இலங்கை பிரியக்கூடாது அனைவரும் ஒன்றுபட வேண்டும்"

- திவ்வியநாதன்

(கொழும்பு)

''இந்தநாடு பிரியக்கூடாது. ஆட்சியை அமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனும் தமிழ் பேசும் மக்கள் சேர்ந்து செயற்படவேண்டும். பெருமபான்மைச்சமூகம்சிறுபான்மையோருடைய சகல உரிமைகளையும் கொடுக்கும் பட்சத்தில் நாம்இணைந்துவாழத்தயார்''.

அம்பாறை மாவட்ட த. வி. கூ. பாராளுமன்ற உறுப்பினர் திரு. திவ்வியநாதன் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களை பேசவைப்பது வெடிகுண்டுகள் தான்.

''வடக்குக் கிழக்கில் ஆட்சியைக் கைப்பற்றிய ஈ பி. ஆர். எல். எவ். ஆயுதத்திலே நம்பிக்கை வைத்துக்கொண்டு ஜனநாயக வழியை முறையாக பின்பற்றவில்லை. ஆட்சியை முறையாகச் செயற்படுத்தாததினுல் இன்று விடுதலைப் புலி

(7-ம் பக்கம் பார்க்க)

சகலவிதமான இறக்குமதி செய்யப்பட்ட
திருமண, பிறந்ததினவிழா அழைப்பிதழ்களுக்கும்
தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திகளுக்கும்
பாடசாலை, காரியாலய உபகரணங்கள்,
மின்சார அலங்காரப் பொருட்களுக்கும்
நியாயமான ஸ்தாபனம்:

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-557)

## உடன் தேவை

பிறவுண் வீதி, அரசடி வீதி சந்திக்கு அருகாமையில் உள்ள புத்தகங்களும், பான்சி சாமான்களும் விற்கும் கடைக்கு பெண் விற்பனையாளர் தேவை. ஒரு மைல் சுற்றுடலுக்குள் வசிப்பவராகவும் A/L படித்தவராகவும் அல்லது வேலையில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் விருப்பத்தக்கது. வாரத்தில் ஐந்து நாட்களும் நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் வேலை செய்யவேண்டும். திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். கடை உரிமையாளருக்கு அறிமுகம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. காலை 10 — 12 மணிக்கிடையில் 9-3-1990-ம் திகதிக்கு முன்னர் கீழ் வரும் விலாசத்தில் வந்து சந்திக்கவும்.

**"GOLDEN SON"**

102, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3531)

## நல்லை ஆதீனத்தில் சிவஞானபோத விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் வாரந்தோறும தவருது நடைபெற்று வரும் சிவஞான பூசை வழிபாட்டின் சிறப்பு நிகழ்ச்சியாக சிவஞான போத விளக்கம் எதிர்வரும் ஞாயிறு தோறும் இலவசமாக நடைபெறக் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் ஏற்பாடு செய்துள்ளார். ஆர்வலர்கள் இச்சந்தர்ப்பத்தைபயன்படுத்தும் வண்ணம் கௌரவ பொறுப்பாளர் சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

சைவ சித்தாந்த தத்துவத்தைப் பல்லாண்டுகளாகப் பேச்சாலும் எழுத்தாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கஞ் செய்துவரும் ''சித்தாந்தச் சுடரொளி'' நா. செல்லப்பாவுக்கு நல்லை ஆதீனச் சித்தாந்தத்துறையினர், சித்தாந்தப் பண்டிதர் நா. கனகரத்தினம் தலைமையில் ஓர் பாராட்டு நிகழ்ச்சியினை நடத்தினர். சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை அன்னுரின் சேவை பாராட்டி சைவபூஷணம் கா. மதியாபரணம் மாலை சூடி வாழ்த்தினுர்.

திரு. நா. செல்லப்பா சைவ சித்தந்தத் தத்துவத்தின் உயர்வினைப்பற்றி ஆய்வுரை நிகழ்த்தினுர் திரு. ப. கணேசலிங்கம் நன்றியுரை பகர்ந்தார்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அ. செபமாலை

மறைவு; 29-2-84 நினைவு: 01-03-90



ஆண்டாறு சென்றாலும்
அணையாது எங்கள் தாகம்
அன்னை மரி
அரவணைப்பில்,
அளித்திட்டோம்
உங்களையே.

பங்குத்தந்தை
அ. அவிதப்பர்
அவர்களினுல்
பலிப்பூசை 1-3-90
காலை 6-30 மணிக்கு
புனித உத்தரிய மாதா
ஆலயம்,
இளமருதங்குளம்,
வவுனியா.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மகன்: செ. டானியல்
உப-அதிபர்
யா/தொண்டமானுறு வீர. ம. வி.
இளமருதங்குளம், வவு/சேமமடுக்குளம்.

(சி3538)

## புழுக்கொடியல் கொள்வனவு

தற்போதைய புழுக்கொடியல் காலபோகத்தில் பனை அபிவிருத்திச் சபை பெருமளவில் புழுக்கொடியல்களை நியாயமான விலையில் கொள்வனவு செய்து வருகிறது. புழுக்கொடியல்களைக் கைபிருப்பில் வைத்திருப்பவர்கள் உடனடியாக இல. 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ப. அ. சபையின் சந்தைப்படுத்தும் பகுதியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். மேலும் தரமான பிற பனம் உற்பத்திகளும் கொள்வனவு செய்யப்படும்.

தலைவர்,
ஏ-569 பனை அபிவிருத்திச் சபை.

## பனம் பொருட்கள் மற்றும் பிரதேச ரீதியான உற்பத்தியாளர் கவனத்திற்கு

பனம் உற்பத்திகள் மற்றும் பிரதேச ரீதியான உற்பத்திகளை ஊக்குவித்தல் தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை 10-03-1990-ந் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு இல. 53, கண்டிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ப. அ. சபையின் சந்தைப்படுத்தும் பகுதிக் காரியாலயத்தில் ஒழுங்கு செய்துள்ள கலந்துரையாடலில் ப. அ. சபைக்கு பனை உற்பத்திகள் மற்றும் பிரதேச ரீதியான உற்பத்திகளை வழங்குவோர்க்கும், இவ்வுற்பத்திகளை சந்தைப்படுத்த உத்தேசித்துள்ளவர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றுர்கள். உற்பத்தியாளர்கள் மாதிரிப் பொருட்களுடனும் மற்றும் அவற்றின் விலை விபரங்களுடனும் தயவு செய்து சமுகம் கொடுக்கவும்.

தலைவர்,
ஏ-568 பனை அபிவிருத்திச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிக்கரகுவா பொதுத் தேர்தலில் அதிபர் ஒட்டேகா தோல்வியடைந்தார்

## நேர்மையான தேர்தல் என்று வரவேற்பு

(மனகுவா)

**நிக்கரகுவாவில் இடம்பெற்ற தேர்தலில் ஆளும் சன்டினிஸ்ர அரசுத் தலைவர் திரு. டானியல் ஒட்டேகா தோல்வியடைந்துள்ளார். எதிர்க்கட்சி கூட்டணி சார்பில் போட்டியிட்ட திருமதி வயலேற்றுசமாரோ வெற்றி பெற்றுர்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இத்தேர்தல் மிகவும் சுதந்திரமாகவும் நேர்மையான முறையிலும் இடம்பெற்றதாக சர்வதேச அவதானிகள் குழுத் தலைவரும் முன்னுள் அமெரிக்க ஜனுதிபதியுமான திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்தார்.

இத்தேர்தலில் ஒருகோடியே 70 லட்சம் பேர் வாக்களித்தனர். திருமதி வயலேற்று சமாரோ 60 சதவீத வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார். இவர் அமெரிக்காவின் பின்னணியில் இயங்கிவரும் 14கட்சிகூட்டணி சார்பில் போட்டியிட்டார்.

இவரது வெற்றி குறித்து அமெரிக்கா மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை தமது தோல்வியை ஒப்புக்கொண்ட திரு. ஒட்டேகா நிக்கரகுவாவின் எதிர்காலத்திற்கு தமது கட்சி அரசுக்கு முழு ஆதரவையும் வழங்குமென்றும் தெரிவித்துள்ளார்.

நிக்கரகுவாவில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தேர்தல் நடைபெற்றமைக்காக திரு. டானியல் ஒட்டேகாவிற்கு பல நாடுகளும் பாராட்டுத்தெரிவித்துள்ளன. (சி)

## சுயதொழில் முயற்சி: இளைஞர்களுக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் வங்கி இளைஞர்களுக்கு சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க முப்பதினுயிரம் ரூபாய்க்குக் குறையாத கடன்களை வழங்கி வருவதாக வடபிரதேச மக்கள்வங்கி முகாமையாளர் திரு. கே. அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

இக் கடன், ஒரு நிறுவனத்தில் தொழில் புரிந்ததன் மூலம் தொழிற் பயிற்சி பெற்றிருந்தாலோ அல்லது முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சியைப் பாடசாலைகளில் பெற்றவர்களும் விண்ணப்பம்செய்யலாம். இங்கு பயிற்சிபெற்றதற்கான அத்தாட்சிப்படுத்தும் தொழில் நுட்ப நிறுவனத்தின் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். (சிறிய வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு சான்றிதழ் அவசியமற்றது. சிறிய வியாபாரமாக இருந்தால், வண்டில்கள், துவிச்சக்கர வண்டிகள் மூலம் இடத்துக்கிடம் பொருட்களை எடுத்துச்சென்று விற்பனைசெய்வதைக் குறிக்கும்).

கடனைப்பெற விண்ணப்பம் செய்ததும் வங்கி அதிகாரிகளின் திட்டத்தின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து திட்ட அறிக்கையை சமர்ப்பித்ததன் மூலம் கடன் வழங்கப்படும். இக்கடனுக்கு பத்தாயிரம் ரூபாய் வரையான கடன்களுக்கு அறுபத்துமூன்று மாத தவணையும், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கடன்களுக்கு எண்பத்தேழு மாத தவணையும் வழங்கப்படும். இதற்கான வட்டி பதினெட்டு வீதமாகும். இக் கடன்களைப் பெறுவதற்கு வழமையான வங்கிப் பிணை கோரப்படமாட்டாதெனினும் வியாபார திட்டத்தின் வாய்ப்பு, நிலையானது கடன் வழங்கும் போது, வங்கியால் பிரதானமாக கருத்தில்கொள்ளப்படும் பத்தாயிரம் ரூபாவரையிலான கடன்களுக்கு பெற்ருேர் அல்லது குடும்ப அங்கத்தவரின் உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளப்படும்.

கடன்முறை வழமையான, நிலையான தவணைமுறைக் கடன்கள் என கருத்தில் கொண்டு வழங்கப்படுமெனவும் இக் கடன் திட்டத்தில் இதுவரை முப்பத்துமூன்று பேருக்கு இரண்டு லட்சத்து ஐம்பத்துமூவாயிரம்ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் நாற்பத்திரண்டு பேருக்கு மூன்று லட்சத்து முப்பத்தாருயிரம் ரூபா சிலதினங்களில் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (12)

## சென். ஜோன் அம்புலன்ஸ் சிறப்பான பணி

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம் பெற்ற மகாசிவராத்திரி விழாவில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர். இவர்களின் வசதியினை முன்னிட்டு திரு. ம. ஞானசம்பந்தன் (படைஅத்தியட்சகர் சாவகச்சேரி) திரு. ஆ கிருஷ்ணராஜா (படைநிறைவேற்று உத்தியோகத்தர் நல்லூர்) ஆகியோரின் தலைமையின்கீழ் சென்ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப்படையைச் சேர்ந்த தொண்டர்கள் சிறப்பான முறையில், பக்தர்கள் பாராட்டும் வகையில் தமது முதலுதவிச் சேவையை அளித்தார்கள்.

எதிர்பாராதவகையில் பஸ் வண்டிமோதி ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த ஆலங்குளம் வடடக்கண்டலைச் சேர்ந்தவர்களான திருமதி க. மகேஸ் (35), திருமதி சி. அப்பம்மா (31), செல்வி ம. பரிமளா (18) ஆகியோரை மன்னுர் வைத்தியசாலையில் உடனடியாக அனுமதித்து சிகிச்சை பெறவும் இவர்கள் உதவியது குறிப்பிடத்தக்கது.

## தமிழில் 'கூரியர்'

[யாழ்ப்பாணம்]

உலக கலை, கலாசாரம், கல்வி சம்பந்தமான துறைகளைமேம்படுத்துவதற்காக 'யுனெஸ்கோ' நிறுவனம் வெளியிட்டுவரும் 'கூரியர்' (Courier) சஞ்சிகை பதினேராவது மொழியாக தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சஞ்சிகை இலங்கையிலும் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான முகவராக லேக்ஹவுஸ் புத்தகசாலை நியமனம் பெற்றுள்ளது. கூரியர் சஞ்சிகைக்கான ஒருவருட சந்தா ஆயிரத்தி நூற்றி இருபத்தி நாலு ரூபாய்ஆகும். [12]

## வடமேற்கு ஐரோப்பாவில் பெரும் சூருவளித் தாக்குதல் 50 பேர் பலி!

### கட்டிடங்கள் வீடுகள் பலத்த சேதம்

(லண்டன்)

வடமேற்கு ஐரோப்பாவில் எழுந்த பெரும் சூருவளித் தாககுதலில் சுமார் 50 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். வீடுகள், கட்டிடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. ஒரு லட்சம் பேர் வரை தங்கள் வீடுவாசல்களை இழந்துள்ளனர்.

இச்சூருவளிக் காற்று பிரிட்டன், அயர்லாந்து, பெல்ஜியம் மே. ஜெர்மனி, பிரான்ஸ் உட்பட வேறும் சில நாடுகளை பலமாகத் தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் 50 பேர் வரை கொல்லப்பட்டதுடன் 500 பேர் வரை பலத்த காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு இந்த சூருவளித் தாக்குதல் இடம்பெற்றது. இதனுல் வீடுகள், கட்டிடங்கள், இடிந்து விழுந்ததுடன் மரங்களும் வீழந்து போக்குவரத்துப் பாதைகளும் தடைப்பட்டுள்ளன.

இச்சூருவளி தாக்குதலினுல் பிரிட்டனில் 12 பேரும் அயர்லாந்தில் நால்வரும், பெல்ஜியம் மே. ஜெர்மனியில் தலா 10 பேரும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்களை அகற்றும் பணி இடம்பெற்றுவருவதாகவும் எனினும் காலநிலை மோசமாக இருப்பதால் இப்பணி தடைப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பத்திரிகையாளர் கொலை: 300 பேர்வரை விசாரணையில்

(கொழும்பு)

பிரபல பத்திரிகையாளர் திரு ரிச்சர்ட் டி சொய்சாவின் கொலை தொடர்பாக 300 பேர் வரை விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதுவரையில் அவரது கொலை தொடர்பாக ஆக்கபூர்வமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தொடர்ந்தும் பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திரு. ரிச்சர்ட் டி சொய்சா ஐரோப்பாவிற்கு செல்லவிருந்ததாகவும் பரீட்சை ஒன்றின் காரணமாகவே அவர் தமது பயணத்தை தாமதப்படுத்தியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

## பல்கேரியாவில் கம்யூ. ஆட்சியை எதிர்த்து 50 ஆயிரம் பேர் ஊர்வலம்

(சோபியா)

பல்கேரியாவில் கம்யூனிச ஆட்சிமுறையை அகற்றக் கோரி சுமார் 50,000 பொது மக்கள் நேற்று முன்தினம் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

இந்த ஊர்வலம் சுமார் பத்துமைல் தூரம் இடம் பெற்றதாகவும் இதில் கலந்து கொண்டோர் கம்யூனிஸ்ட் அரசுக்கு எதிராக பலத்த கோஷமிட்டதுடன் பதவி விலகக் கோருமாறு சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டமும் செய்தனராம்.

மேற்படி ஊர்வலத்தை எதிர்க்கட்சிக் கூட்டணியான 'ஜனநாயகக் கட்சி' ஏற்பாடு செய்திருந்தது. பல்கேரிய வரலாறறிலே அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஊர்வலங்களில் இதுதான் மிகப்பெரிய ஊர்வலம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பத்தரை வருட காலம் தபாலில் சென்ற கடிதம்

(வெரோனு)

ஆர்ஜன்டீனுவிலிருந்து தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் ஒன்று பத்தரை ஆண்டுகளிளின் பின் நேற்று முன்தினம் அது சேரவேண்டிய முகவரியான இத்தாலிக்குப் போய் சேர்ந்துள்ளது.

இந்த சுவையான சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: ஆர்ஜடீன்னுவில் 'டியரேுவற்' நகரிலிருந்து இத்தாலியிலுள்ள தனது மாமியாருக்கு 1979ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மருமகள் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அக்கடிதம் நேற்று முன்தினம் தான் அது சேரவேண்டிய முகவரிக்கு சென்றடைந்தது.

இதில் விஷயம் என்னவென்ருல் கடிதம் எழுதியவரும் அதனை பெறவேண்டிய இருவரும் கடந்த 5 வருடங்களுக்கு முன் இறந்து விட்டனர். (சி)

## மருந்துக்கலவையாளர் 11 பேர் தெரிவு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து கலவையாளர்கள் பற்ருக்குறையை நிவர்த்தி செய்வதற்காக யாழ். சுகாதாரத் திணைக்களம் பதினெரு பேரை மருந்து கலவையாளர்கள் பயிற்சிக்கு தெரிவுசெய்துள்ளது.

கடந்த 1989ம் ஆண்டில் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு இணங்க நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இவர்களுக்கு பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் கடந்த மாதம் தொடக்கம் ஆறுமாதகால பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. [illegible] முடிவில் நடாத்தப்படவுள்ள பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு மூன்று மாதகால உள்ளகப்பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது, மருந்துகலவையாளர்கள் பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு:

தசிந்தா பாலசுப்பிரமணியம் மல்லாகம், ஜெயந்தி தம்பித்துரை சுன்னுகம், கமலாதேவி கணபதிப்பிள்ளை நீர்வேலி, என். கணேஸ்வரமூர்த்தி கரவெட்டி, பி சோமஸ்கந்தன், யாழ்ப்பாணம், இராசரத்தினம் சிறிரவீந்திரா சுழிபுரம். அருள்நிதி அருணுசலம் கொக்குவில், ஞானம்பிகை செல்வகுமார் மல்லாகம், கிருஷ்ணவேணி பரமு பூநகரி, பசுபதி காந்தரூபன் இயக்கச்சி, மாணிக்கப் குமாரசாமி மீசாலை. (72)

## இன்று நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் திரு. வி. நித்தியானந்தன் எழுதிய 'இலங்கை அரசியல் பொருளாதாரம் (1948-1956) வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்' என்னும் நூல் வெளியீட்டுவிழா இன்று மாலை மூன்று மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும். விழாவிற்கு யாழப்பாணப் பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ந. பேரின்பநாதன் தலைமை தாங்குவார்.

புதிய நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்க கலைப்பீடாதிபதி பேராசிரியர் திரு. என். பாலகிருஷ்ணன் வெளியிட்டு வைப்பார் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் வழங்குவார். (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தாமரைத் தண்டின் நூலால் யானையைக் கட்டினுலும் இனிய மொழியால் மூர்க்கனைக் கட்டமுடியாது,
— பர்த்ருஹரி நீதி

# நமது நோக்கு

## போக்குவரத்து - சில குறைபாடுகள்

சர்வதேசப் போக்குவரத்துக்கள் இன்றைய காலகட்டத்திற் சர்வ சாதாரணமாகிவிட்டன.

ஆனுல், எமது நாட்டில் உள்ள நிலையே கெட்டுவிட்டது. முன்னேற்றம் வேண்டாம்; இருந்த நிலையே வந்தாற்போதும் என மக்கள் எதிர்பார்க்கிருர்கள்.

வியாபாரத்திற்காக, கல்விக்காக, வேலை பெறுவதற்காக, சுற்றுலாவிற்காக மக்கள் வெளிநாடுகள் போகின்றனர்.

இதைவிட, எமது மக்களிற் பெரும்பான்மையோர் யாத்திரைக்காக கலாச்சாரப் பரிவர்த்தனைக்காக, அயல்நாடான இந்தியாவிற்குச் சென்று வருகிருர்கள்.

குறிப்பாக தென்னிந்தியத் திருத்தலங்களுக்குச் சென்றுவருவோர் தொகை இதிற் கணிசமானது,

எனவே மக்கள் வசதியாகப் போய்வருவதற்கான வழிவகைகள் காணப்படவேண்டும்.

தலைமன்னுர் மூலம் இருந்த கப்பற்சேவை சென்ற சில வருடங்களாகத் தடைப்பட்டுள்ளது.

இதேபோல, பலாலி—திருச்சி, பலாலி—சென்னை ஆகிய விமான சேவையும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டித் தடை செய்யப்பட்டன.

இதன் விளைவு? மக்கள் கொழும்பு சென்று காத்திருந்து, விமான சேவையைப் பெறவேண்டியுள்ளது. இதனுல் யாத்திரீகர்களும் ஏனையோரும் படும் கஷ்டங்கள்தான் எவ்வளவு?

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, மன்னுர் ஆகிய மாவட்டத் தலைநகர்களிலிருந்து கொழும்புக்குச் செல்வதே பெரிய கஷ்டநிலைக்குள்ளாயிருந்தது. இந்த நிலை மாறிவருவது மகிழ்ச்சிக்குரியது!

ஒழுங்கான ரயிற்சேவைகள் தடைபட்ட காலங்களில், மக்கள் தனியார் பஸ் சேவைகளையே பெரிதும் நம்பியிருந்தனர்.

இவற்றிற் பயணம்செய்பவர்கள் கூட சில அசாதாரண வேளைகளில், வழிப்பறிக்கும் உயிர்ப் பலிக்கும் ஆளாக நேரிட்டது.

அண்மையில்கூட இத்தகைய சம்பவம் ஒன்று நொச்சியாகமப் பகுதியில் நடந்ததாகத் செய்திவந்துள்ளது.

மலிவாகக் கப்பற்சேவையைப் பயன்படுத்தவேண்டிய மக்கள் கூட, விமானச் செலவாகப் பெருந்தொகையைச் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தவேளையில், பலாலி-திருச்சி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமெனத் திரு. இராஜனுர்த்தனன் குரல் கொடுத்திருக்கிருர். தமிழக அரசியல் தலைவர்களில் முக்கிய இடம்பெற்றவர்களில் இவரும் ஒருவர். தமிழ் பேசும் மக்கள் படும் இன்னல்களை நன்கறிந்தவர்.

இந்த விமானச்சேவை பற்றி இவர் குரல் எழுப்பியது இது முதல்தடவையல்ல. இலங்கை—இந்திய அரசுகள் இரண்டுமே இவற்றில் அக்கறை காட்டவேண்டும் என அவர் வலியுறுத்தியிருக்கிருர்.

இது ஒரு புதிய சேவைக்கான வேண்டுகோள் அல்ல. ஏற்கனவே பல்லாண்டு காலமாக இருந்த சேவையைத்தான் மீண்டும் ஏற்படுத்துவதற்கான வேண்டுகோள்.

இதைவிட, மாவட்ட சபை அமைக்கப்பட்ட காலத்தில், காங்கேசன்துறை – நாகபட்டினம் கப்பற்சேவை ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது.

ஆலோசனைகள் எல்லாம் 'குளிர்சாதனப்' பெட்டிக்குள் போகாது என நம்புகிறோம்.

மக்களின் பொருளாதாரநிலை, அனுபவிக்கும் கஷ்டங்கள் ஆகியவற்றை மனதிற்கொண்டு, துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிருேம்.

## ஜி.ஸி.ஈ.(உயர்தர) முடிவுகள் விரைவில் வெளிவரும்

(கொழும்பு)

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். இம்முடிவுகள் இன்னும் இரு வாரத்தில் வரலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி 18ம் திகதியுடன் விடைத்தாள்கள் திருத்தும் வேலை முடிவு பெற்றுள்ளது. விடைத்தாள்கள் திருத்தப்பட்டு எட்டு வாரங்களின் பின் முடிவுகள் வெளியிடப்படும். ஆறு வாரங்கள் முடிவுற்றுள்ளன.

முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் அடுத்த ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சி)

## உங்கள் பிரச்சனை என்ன?

அரச, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சனைகளை நீங்கள் எழுதி அனுப்புங்கள்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, அதற்கான பதில்களைக் காலக்கிரமத்தில் வெளியிட முடிவுசெய்துள்ளோம்.

நீங்கள் எழுதவேண்டிய முகவரி:

"உங்கள் பிரச்சனை" ஈழநாடு,
த. பெ. [illegible] யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தனியார் கல்வி நிலையங்கள் பற்றி கருத்துக்கணிப்பு:

# 'உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்ட காலத்தில் தனியார் கல்வி நிலையங்களே கைகொடுத்தன"!

எண்பத்திமூன்றும் ஆண்டுக்குப்பிற்பட்ட காலத்தில் எமது பகுதிகளில் அமைதி நிலவவில்லை. பாடசாலைகள் பூரணமாக இயங்கவில்லை. மாணவர்களுக்கான பாட விதானங்கள் பூர்த்தி செய்யப்படாமல் பாடசாலைகள் மூடிக்கிடந்தன. மாணவர்கள் தத்தளித்தபோது தனியார் கல்வி நிலையங்களே கைகொடுத்து உதவின. இன்றும் அதே நிலைதான். யாரும் மறுக்க முடியாத உண்மை.

தனியார் கல்வி நிலையங்களே அவர்களை அரவணைத்து, பாடவிதானங்களைப் பூர்த்திசெய்து, பரீட்சைக்கு தயார் நிலையைத் தோற்றுவித்து அவர்களுக்குள் இருந்த இடைவெளியைப் பூர்த்திசெய்தன. உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டபோதும் தமிழ் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களின் சேவையால் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்கிருர்கள். அப்போதெல்லாம் எவராவது தனியார் கல்வி நிலையங்களை சாடியதுண்டா?

பாடசாலைகளைப் பொறுத்தவரையில், உயர்கல்வி மாணவனுக்கும் சிறிய வகுப்பில் படிக்கும் மாணவனுக்கும், ஒருபாடத்தைக் கற்பதற்கு முப்பது நிமிடமே ஒதுக்கப்படுகிறது. இந்த நேர காலத்தில் அந்த மாணவர் செயல்முறைப் பயிற்சியைச் செய்வதா? வினுக்களைச் செய்து பயிற்சி பெறுவதா? பாடங்களைப் படிப்பதா? என்பது பெரிய பிரச்னை. இந்த நேரத்தில் ஒரு மாணவர் சுயமாக சிந்தித்து பாடங்களை மீட்க முடியுமா?

தனியார் கல்வி நிலையங்களே சிறந்த முறையில் ஒரு பாடத்தைக் கற்க ஒரு மணித்தியாலம் வழங்கப்படும்போது தனியார் கல்வி நிலையங்களை மாணவர்கள் நாடும்போது யார்தான் தடுக்க முடியும்? அவன் தனது கல்வியை விருத்தி செய்ய ஓடிவருகிறுனேயொழிய, வேறு நோக்கம் அவனுக்கு எதுவுமில்லை.

இன்றைக்கு பாடசாலைகளில் திறமையான ஆசிரியர் ஒருவரை தாம் விரும்பியவாறு நியமனம் செய்விக்க அதிபர்களுக்கு அதிகாரமில்லை. ஏதோ திணைக்களம் செய்யும் நியமனத்தைக்கொண்டு அந்தப் பாடசாலையில் கற்கும் மாணவர்களை பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எந்த அதிபர்களாலும் தோற்றுவிக்க முடியுமா? இதனுல்தான் "ஆசிரியன் என்பவன் சிறந்த நடிகன்" என்கிறது ஆங்கிலப் பழமொழி. இந்தத் திறமை சில ஆசிரியருக்குத்தான் இருக்கும். அப்படியாக திறமையாக போதனை செய்து மாணவர்களுக்கு கிரமமாக விளங்க வைக்கக்கூடிய ஆசிரியர்கள் வருமானத்தைக் கருத்தில் கொண்டு தனியார் கல்வி நிலையங்களில் போதனை செய்கிருர்கள். அவர்கள் ஒருபாடசாலையில் குறிப்பிட்ட மாணவர்களைத்தான் சிறப்பாக சித்திபெற வழிசெய்யலாம். தனியார் கல்வி நிலையங்கள் மூலம் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்கள் எத்தனை மாணவர்களை திறமையாக சித்தியெய்த வைக்கிருர்கள் என்பது புரியாத புதிரல்ல.

சிலர் தனியார் கல்விநிலையங்கள் மீது குறைகூறுவது சகஜமாகிவிட்டது. தனியார் கல்வி நிலையங்களில் ஆண்களும் பெண்களும் கலந்து கற்று வருவதால் மாணவர்களிடையே ஒருமயக்கநிலை உருவாகி கல்வியை கெடுத்துவருவதாக குற்றச்சாட்டைசுமர்த்துகிருர்கள். இதை நான் மறுக்கிறேன் தனியார் கல்வி நிலையங்களுக்கு வரும் ஒவ்வொரு மாணவரும் கல்வியைக் கற்கவே வருகிருர்கள். பணத்தைக் கொடுத்தே கற்கிருர்கள். அவர்கள் கற்க வருகிருர்களேயொழிய புறத்தூண்ட

(6ம் பக்கம் பார்க்க)

**கே. ஆனந்தகுமார்**
(பொண்ட் கல்வி நிலைய இயக்குநர்)

## தவக்கால நற்சிந்தனை

### திருநீற்றுப் புதன்

கிறிஸ்தவ திருவழிபாட்டு ஆண்டின் தவக்காலம் இன்று ஆரம்பமாகிறது. கிறிஸ்துவின் உத்தான விழாவாகிய பாஸ்காவிழாவுக்கு நம்மை ஆயத்தம் செய்யும் முகமாக நமக்களிக்கப்பட்ட புனித காலமே தவக்காலம். இக்காலத்தின் ஆரம்ப நாளாகிய இன்று நான் யார்? எதற்காக நான் இம்மண்ணில் வாழ்கிறேன்? என்பன பற்றிச் சிறிது சிந்திப்போம்.

உலகும் அதிலுள்ள படைப்புகளும் தோன்றுமுன்னே இறைவன் இருந்தாரென வேதாகமத்தின் முதற்பக்கத்தில் படிக்கிருேம். அப்படியென்ருல் அவருக்குப் படைப்புகள் தேவையில்லை. தனது நன்மைக்காக அவற்றைப் படைக்கவில்லை. இருந்தும் இறைவன் உலகையும் மனிதனையும் படைத்தாரென்ருல் கரைகாணுத அளவற்ற தன் அன்பையும் கருணையையும் பிரதிபலிக்கவே என்றுதான் கொள்ள வேண்டும். படைப்பின் சிகரமாக மனிதன் படைக்கப்பட்டான். ஆம் இறைவனின் படைப்புகளுள் மிக உன்னதமான படைப்பு மனிதன். ஏனைய படைப்புகளைப் போலன்று தனது சாயலாகவும் பாவனையாகவும் இறைவன் மனிதனைப் படைத்தார். தன்னைப்போன்று சுதந்திரமும் சிந்திக்கும் ஆற்றலுமுடையவனுகவே மனிதன் இயங்கும் தன்மையை இறைவன் மனிதனுக்களித்தார். இவற்றின்முலம் தன்னைப்படைத்த இறைவனை மனிதன் நன்கறிந்து சுயாதீனமாக வழிபட்டு அவருக்கு அன்புப்பணி செய்ய வேண்டியது மக்களின் கடமை.

படைத்தவன் எல்லாம்
படைத்தான்
மனுவுக்காகப்
படைத்தான்
மனுவைப் படைத்தான்
தனைவணங்க

ஆம் இதற்காகத்தான் நான் இம் மண்ணில் வாழ்கிறேன். ஆனுல் இறைவனுக்குப் பணிபுரிவதென்ருல் என் அயலானுக்கு அன்புப்பணி செய்வதன் மூலமே அதை நிறைவேற்றலாம். ஏனெனில் அயலானுக்குச் செய்யும் அன்புப்பணியே ஆண்டவனுக்குச் செய்யும் அருட்பணி. எனவே என்னைச் சுற்றிவாழும் என் சகோதர சகோதரிகளின் இன்னல்களில் துன்பங்களில் அவர்களுக்கு அன்புக்கரம் நீட்டி அவர்களது துயர் துடைத்து அவர்களும் அமைதியுடன் வாழ வழி செய்வதே எனது வாழ்க்கையின் நோக்கம். இதைத் திறம்படச் செய்ய இத்தவக்காலம் என்னைத் தூண்டட்டும்.

**லோ. வ. இராயப்பு**
மா. ம. தி

# பலதும் பத்தும்

### றெல்லா

யாழ்ப்பாணக் கிராமப் பையன் கனகரத்தினம் அவன் ஓர் விவசாயி.

ஒரு நாள்......ஊரடங்கு நேரம்! கொழும்பில் இருந்து வந்த நால்வர் அவன் வீட்டில் தங்க நேர்ந்தது.

தாங்கள் மாலுமிகள் என்றும், கனகரத்தினமும் மாலுமியானுல் கைநிறையச் சம்பாதிக்கலாம் என்றும் ஆசையூட்டினுர்கள்.

அவன் மனைவியோ சிங்களப் பெண். வெளிநாடு போக அவளும் தூண்டினுள். நண்பர்களோடு சேர்ந்து அவனும் அவ்வாருே பாரிஸ் போய்ச் சேர்ந்துவிட்டான்!

அங்கு சென்ற பின்தான் அவனுக்கு 'ஓடிவெளிச்சுது' தனது நண்பர்கள் மாலுமிகள் அல்லவென்றும், வெளிநாட்டு ஆசையால் வந்தவர்கள் என்றும்,

மொழிப்பிரச்சனை - வேலை கிடைக்காத பிரச்னை - விசாப் பிரச்னை! 'விற்றுச் சுட்டு'க் கொண்டுவந்த அவர்களது பணம் பாரிஸ் வீதியிலே கரைந்தது.

'ஏர் முனைக்கு நேர் எதுவுமில்லை!' என்ற ஞானுேதயம் கனகரத்தினத்திற்குப் பாரிஸ் விதியிலே ஏற்பட்டது!

யார் இந்தக் கனகத்தினம்? பிரபல சிங்கள நாடகாசிரியர் சிசில் டெனிசன் எழுதிய நாடகக் கதாநாயகன்!

இவ்வாண்டு மார்ச்சில் மேடையேறவிருக்கிறது. இந்த நாடகம் காலி, மொறட்டுவ, கொழும்பு ஆகிய பகுதிகளில் 110 காட்சிகளுக்கு ஏற்கனவே ஒழுங்குகள் உண்டு.

றெல்லா. ....அது என்ன? நாடகத் தலைப்புத்தான்!

**வாணி**

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம்

# யாழ். மாவட்டத்துக்கு ரூ. 1,69,62,830 ஒதுக்கீடு

(சித்தங்கேணி நிருபர் அ. கதிர்காமநாதன்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செவுத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு 1989ம் ஆண்டு ஒதுக்கீடுசெய்யப் பட்ட நிதி, இந்த ஆண்டு செவழிக்கப்படவுள்ளது.

மொத்தமாக ஒரு கோடியே 69 லட்சத்து 62 ஆயிரத்து 830 ரூபா யாழ். மாவட்டத்துக்கு பல்வேறு திட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்விக்கு தொடர்வேலைகளுக்காக 9 லட்சத்துக்கு 36 ஆயிரம் ரூபாவும் புதிய வேலைகளுக்காக 53 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 63 லட்சத்து 6 ஆயிரம் ரூபாவும், மின்சாரத்துக்கு, புதிய வேலைகளை மேற்கொள்வதற்கு 33 லட்சத்து 16 ஆயிரத்து 660 ரூபாவும், உள்ளூராட்சிக்கு 14 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவும், சுகாதாரத்துக்கு 12 லட்சத்து 90 ஆயிரத்து 695 ரூபாவும், கடற்றொழில் அபிவிருத்திக்கு 7 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், கிராம அபிவிருத்துக்கு 3 லட்சுத்து 65 ஆயிரம் ரூபாவும், சந்தைப்படுத்தல் அபிவிருத்திக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பனம் பொருள் அபிவிருத்திக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நீர் வழங்கல் அபிவிருத்திக்கு ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும், கமத்தொழில் அபிவிருத்தி (ஆராய்ச்சி) ஒரு லட்சம் ரூபாவும் வும், கூட்டுறவு அபிவிருத்திக்கு 80 ஆரம் ரூபாவும், கமத்தொழில் (விரிவாக்கம்) அபிவிருத்திக்கு 60 ஆயிரம் ரூபாவும், வீதி அபிவிருத்திக்கு தொடர் வேலைகளுக்கு 22 லட்சத்து 92 ஆயிரத்து 305 ரூபாவும், புதிய வேலைகளுக்கு ஒரு லடசத்து 77 ஆயிரத்து 170 ரூபாவும் மொத்தமாக 24 லட்சத்து 69 ஆயிரத்து 475 ரூபாவும் ஒதுக்கீடுசெய்யப் பட்டுள்ளது.

## கல்வி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இரண்டு மாடிக்கட்டிடம் அமைத்தல் ருபா 9,36,000. வேலணை சைவப்பிரகாச வித்தியசாலை கட்டிடம் அமைத்தல் ரூ. 2,00,000, நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி வித்தியாலயச் கட்டிடத்தைத் திருத்துவதற்கு ஒரு லட்சத்து 50-000 ரூபா, சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்திற்கு தளபாடங்கள் உபகரணங்கள் வழங்குவதற்கு 75-000 ரூபா, பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. பாடசாலை கட்டிடத் தொடர் வேலைக்கு இரண்டு லட்சம் ரூபா.

சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்துக்கு கட்டிடத் தொடர் வேலைக்கு இரண்டு லட்சத்து 20 ஆயிரம் ரூபா. இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலய கட்டிடத் தொடர் வேலைக்கு இரண்டு லட்சம் ரூபா, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு மலசல கூடம் அமைப்பதற்கு 75 ஆயிரம் ரூபா.

ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை கட்டிடத் திருத்த வேலைக்கு ஒரு லட்சம் ரூபா. ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்துக்கு கட்டிடத் தொடர் வேலைக்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா. இணுவில் அ. மி. த. க. பாடசாலை கட்டிட திருத்த வேலைக்கு இரண்டு லட்சம் ரூபா.

கோப்பாய் நாவலர் மகா வித்தியாலய கட்டிடத் தொடர் வேலைக்கு இரண்டு லட்சம் ரூபா. கோப்பாய் குட்டியபுலம் அ. த, க. பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு மூன்று லட்சம் ரூபா.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு கட்டிடத் தொடர் வேலைக்கு இரண்டு லட்சம் ரூபா. நாகர்கோவில் அ. மி. த. க. பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா.

குடத்தனை கரையூர் அ. மி. த. க. பாசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ருபா.

குடத்தனை றோ. க. த. க. பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா.

மருதங்கேணி இ. த. க. பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா.

ஆழியவளை சீ. சீ. ர். எம். எஸ். பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா.

செம்பியன்பற்று றோ. த.க. பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா.

மிருசுவில் றோ. க. த. க. பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா.

நல்லூர் நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்துக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

கலட்டி மெ. மி. த. க. பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு 3 லடசத்து 50 ஆயிரம் ரூபா.

யாழ். கல்வித்திணைக்களத்துள் தொழில்நுட்ப முறை சாராக் கல்விக்கான கல்வி ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு 10 லட்சம் ரூபா.

## வீதிகள்

சண்டிலிப்பாய் நவாலி புது வீதிக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, மாவிட்டபுரம் வசாவிளான் வீதிக்கு 45 ஆயிரம் ரூபா, அளவெட்டி அம்பனை வீதிக்கு 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா, மாவிட்டபுரம் அரசமரத்தடி வீதிக்கு 8 ஆயிரத்து இருநூறு ரூபா. திருநெல்வேலி கோப்பாய் வீதிக்கு 1லட்சத்து 80 ஆயிரம் ரூபா நீர்வேலி புன்னாலைக்கட்டுவன் வீதிக்கு 1 லட்சத்து 53 ஆயிரம் ரூபா. புத்தூர் உணவுக் களஞ்சிய வீதிக்கு 21 ஆயிரம் ரூபா, நல்லூர் திருநெல்வேலி உதவி அரசாங்க அதிபர் பணிமனை வீதிக்கு 12 ஆயிரம் ரூபா, உடுப்பிட்டி-மாலிச்சந்தி அல்வாய் வீதிக்கு 5லட்சத்து 15 ஆயிரம் ரூபா. கரவெட்டி வீதிக்கு 4 லட்சத்து 28 ஆயிரம் ரூபா, மீசாலை வரணி விதிக்கு 2 லட்சத்து 17 ஆயிரம் ரூபா.

## மின்சாரம்

தாழையடி புதுக்காடு சந்தியிலிருந்து மருதங்கேணி வரையுள்ள கிராமங்களுக்கு மின்சாரத்தைஏற்படுத்திக்கொடுப்பதற்கு 12 லட்சத்து 86 ஆயிரம் ரூபா, வரணியிலிருந்து குடத்தனைவரையுள்ள கிராமங்களுக்கு மின்சாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு 20 லட்சத்து 30 ஆயிரத்து 660 ரூபா.

## உள்ளூராட்சி

பிரதேச சபை. நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றம் ஆகிய சபைகளின்கீழ் பாலர் பாடசாலைகள், புதிய கட்டிடங்கள். சிறுவர் பூங்காக்கள் அமைத்தல், தளபாடங்கள் கொள்வனவு செய்தல் ஆகியவற்றுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, பிரதேச சபைகளின் கீழ் சிறுகைத்தொழில்களை ஏற்படுத்தி தொழில் வாய்ப்பு திட்டங்களை நிறுவுவதற்கு 6லட்சம் ரூபா. பிரதேச சபைகளின்கீழ் இயங்கும் பொது நூல் நிலையங்களுக்கு புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா புங்குடுதீவில் கைத்தொழில் கூடம் ஒன்றை அமைப்பதற்கு 1 லட்சம் ரூபா, வட்டுக்கோட்டை முதலி கோவிலடி நீர்விநியோகத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு 40 ஆயிரம் ரூபா. சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபை சன சமூக நிலையங்கள் அமைப்பதற்கு 95 ஆயிரம் ரூபா, யாழ்ப்பாணம், ஆரியகுளம் சன்மார்க்க ஐக்கியவாலிபர் சங்க கட்டிடங்களை விஸ்தரிக்க 50 ஆயிரம் ரூபா.

## சுகாதாரம்

அளவெட்டியில் புதிய மத்திய மருந்தகமும் பிரசவ நிலையமும் அமைப்பதற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, உடுவிலில் புதிய மத்திய மருந்தகம் அமைப்பதற்கு 3 லட்சத்து 50ஆயிரம் ரூபா, அச்சுவேலி ஆரம்ப வைத்தியசாலையில் வைத்தியர்களின் வதிவிடங்களுக்கான கட்டிடம் அமைப்பதற்கு 2 லட்சம் ரூபா, பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் சிகிச்சை அறைக்கான கட்டிடம்அமைப்பதற்கு 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா. மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் பிரசவ அறை, கடமை அறை ஆகிய கட்டிடங்களை அமைப்பதற்கு 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா.

## கடற்றொழில்

புங்குடுதீவு, பொன்னாலை, தொண்டமானாறு. நாவற்குழி கோயிலாக்கண்டி, பாஷையூர். குருநகர், அராலை கிழக்கு ஆகிய இடங்களில் இறால் வளர்ப்பதற்குத் தகுதியான இடங்களைத் தெரிவுசெய்தற்கான ஆய்வுகளுக்கும், உப்புநீர் அடர்த்தியைக் கட்டுப்படுத்துவதற்கான மானியைக் (றிப்பிறிக்கேற்றர் மீற்றர்) கொள்வனவு செய்வதற்கும் 40 ஆயிரம் ரூபாவும், குருநகர் இறங்குதுறையை ஆழமாக்குவதற்கும் திருத்துவதற்கும் ஒரு லட்சம் ரூபாவும், வடமாகாண மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு மின்னுக்கியை கொள்வனவு செய்வதற்கு 6லட்சம் ரூபா.

## கிராமிய அபிவிருத்தி

புங்குடுதீவு மகளிர் கிராம முன்னேற்றச்சங்க தையல் நிலையக்கட்டிடத்தை திருத்தியமைப்பதற்கு 65 ஆயிரம் ரூபாவும், சுளிபுரத்தில் கைத்தொழில்கூடத்தை அமைப்பதற்கு 1 லட்சம் ரூபாவும் மைலணி உடுவில் கைத்தொழில் கூடத்தை அமைப்பதற்கு 1 லட்சம் ரூபாவும் கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச்சங்க மண்டபம் அமைப்பதற்கு ஒருலட்சம் ரூபா.

## சந்தைப்படுத்தல் அபிவிருத்தி

யாழ்ப்பாண நகரத்தில் கமத்தொழில் உற்பத்திகளை கொள்வனவு செய்தல் சந்தைப்படுத்துதல் விதைப் பொருள்களை கொள்வனவு செய்து கமக்காரர்களுக்கு வழங்குதல் மீன்கொள்வனவும் களஞ்சியப்படுத்தலும் உற்பத்தியாளர்களுக்கு தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு உதவுமுகமாக தகவல் ஆரம்ப பிரிவொன்றை நிறுவுதல் ஆகியவற்றுக்காக விசேட கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

## பனம் பொருள் அபிவிருத்தி

வரணியில் பனம் பொருள் திட்டங்களுக்கான கட்டிடம் அமைப்பதற்கு காணி சுவீகரிப்பதற்கும் காணியைச் சுற்றி வேலி அமைத்தலுக்கும் 2லட்சத்து 50ஆயிரம் ரூபா.

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்தில் தற்போது 'சூறுவளி' வேகத்தில் சுற்று விஜயம் செய்யும் தமிழக அரசியல் பிரமுகர் திரு. பி. நெடுமாறன் திருச்சி -கொழும்பு விமான மார்க்கமாகத்தான் இலங்கைக்குள் நுழைந்தார்.

விமானத்திலிருந்து இறங்கி கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் காலடி வைத்ததும் முதல்வேலை 'இமிகிரேஷன்' பகுதியில் 'பாஸ்போட்'டை ஒப்படைப்பதுதான்.

திரு. நெடுமாறன் தமது கடவுச்சீட்டை ஒப்படைத்தார். அதனைப் பார்வையிட்ட அதிகாரி, வெகு கூர்மையாக திரு. நெடுமாறனை நோட்டம் விட்டார்.

''கடலைக் கடந்து வந்த அந்த நெடுமாறன் நீங்கள் தானா...?'' என்று வியப்போடு கேட்டு விட்டு, ''ஒரு நிமிடம் நில்லுங்கள்'' என்று கூறி உயர் அதிகாரியின் அலுவலகத்துக்குச் சென்று விட்டார் அந்த 'இமிகிரேஷன்' அதிகாரி.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். அந்த அதிகாரி வந்தார். கூடவே திரு. நெடுமாறனையும் உயர் அதிகாரியிடம் அழைத்துச் சென்று விட்டார்.

வழக்கம் போல திரு. நெடுமாறனிடம் ஓரிரு கேள்விகள். பின்னர்...?

நாலைந்து அதிகாரிகள் குழுமிநின்று திரு. நெடுமாறனுடன் நட்புறவுடன் தமாஷாக அரசியல் பேசத் தொடங்கி விட்டனராம்.

''தமிழக அரசியல் எப்படி? புலிகளின் நிலை என்ன? இப்பொழுது நடைபெறும் பேச்சுவார்த்தை வெற்றி பெறுமா..?'' என்று கேள்விகள் கேட்டு திரு, நெடுமாறனையே 'குஷி'யாக்கி விட்டனராம்.

— ஊடுருவி

## விசேட ஆணையாளர்

[மன்னார்]

மன்னார் பிரதேச சபைக்கு புதிய விசேட ஆணையாளராக மன்னார் பிரதேசசபை பிரதம லிகிதர் திரு. ஏ. கே. ஏனுதிநாதன் நியமனம் பெற்றுள்ளார். பேசாலை உப அலுவலகத்துக்கு செல்வி சாந்தி பிரதம லிகிதராக நியமனம் பெற்றுள்ளார்.

## நீர் வழங்கல்

சங்கரத்தையிலுள்ள துணைவி வீடமைப்புத்திட்ட கிராமம் சங்கானை மேற்கிலுள்ள பல்லசுட்டிகிராமம், சுளிபுரத்திலுள்ள காட்டுப்புலம் கிராமம் பொன்னாலை குடியேற்றத் திட்டம், காக்கைதீவு வீடமைப்புத்திட்டம், மாவிட்டபுரம், கலட்டி கிராமம் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல் பற்றிய சாத்தியக்கூறு ஆய்வுகளுக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

## கமத்தொழில் ஆராய்ச்சி

திருநெல்வேலியிலுள்ள கமத்தொழில் ஆராய்ச்சி நிலையத்துக்கு பண்ணைச் சாதனங்கள் துணைச்சாதனங்கள், கருவிகள் ஆகியவற்றுடன் கூடிய இரண்டு சில்லு உழவு இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு ஒருலட்சம் ரூபா.

## கூட்டுறவு அபிவிருத்தி

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனைக்கு அலுவலகச் சாதனங்களும், தளபாடங்களும் கொள்வனவு செய்வதற்கு 80ஆயிரம் ரூபா.

## கமத்தொழில்

திருநெல்வேலியில் கமத்தொழில் உதவிப்பணிப்பாளர் பணிமனைக்கு அடுத்துள்ள காணியில் நல்ல தரமுள்ள மரக்கறி நாற்றுக்களையும் பழமரக்கன்றுகளையும் வழங்குவதற்கான நாற்று மேடைகளை அமைப்பதற்கு60 ஆயிரம் ரூபா

இந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை இந்த வருட முற்பகுதியிலேயே செலவழித்து திட்டங்களை நிறைவேற்றுவதற்கு யாழ். அரசாங்க செயலக திட்டமிடல் பணிமனை முடிவுசெய்துள்ளது.

[131]

## இராசி பலன்

2 - 2 - 1990

புதன்கிழமை

மேடம்: அறிஞர்கள் பாராட்டு, பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, அரசியல் சிந்தனை, தொழில் முயற்சி.

இடபம்: வீண் யோசனை, வாழ்க்கைப் போராட்டம், குடும்பத்தில் அமைதி, தொழில் பாதிப்பு, நண்பர் உதவி.

மிதுனம்: நோய் தணியும், ஆலய தரிசனம், குடும்ப மகிழ்ச்சி, நண்பர் வருகை, பொதுச்சேவை, நன்மதிப்பு.

கடகம்: தொழில் மாற்றம், அநாவசிய தலையீடு, தாய்வழி கவலை, சினேகிதர் பகை, குடும்ப சுகம்.

சிங்கம்: காரிய தாமாதம், பணச்சுமை, பரிகசிக்கப்படல், குடும்பப்பிணக்கு, அந்நிய வாசம்.

கன்னி: விபத்துக்குள்ளாதல், வீண் கோபம், மனப் போராட்டம், தொழில் லாபம், குடும்ப பிரிவு.

துலாம்: மகிழ்ச்சியான தகவல், பணப்புளக்கம், பெண்வழி தேசம், நல்லோர் சந்திப்பு, கடித உறவு.

விருச்சிகம்: திருமண யோகம், மாமனார் உதவி, மனமகிழ்ச்சி, அயலவர் தேசம், தானதர்மம்.

தனுசு: தொழில் துன்பம், வைத்தியச் செலவு, பணக்கஷ்டம், பயணங்களால் அலைச்சல், விருந்துபசாரம்.

மகரம்: நோய் வாட்டும், மாமியார் சச்சரவு, அரச விரோதம், கீழ்படியல், தொழில் போட்டி.

கும்பம்: எதிர்பார்த்த செய்தி, விவேகமற்ற முடிவு, தந்தைக்கு ரோகம், குடும்ப சந்தோஷம், அதிஸ்டம்.

மீனம்: வாக்கு விரோதம், பயணக்களைப்பு, தொழில் குழப்பம், மனைவியால் தொல்லை. அகங்காரம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மார்ச் 1-ம் திகதிக்கு முன்னர் அரசியல் கட்சி வேட்பாளர்களும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்

(கொழும்பு)

துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளையும், அனுமதிப் பத்திரமின்றி வைத்திருப்போரும், மாகாணசபைத் தேர்தல் அல்லது பொதுத்தேர்தலுக்கு முன்னர் இத்தகைய ஆயுதங்களைப் பெற்றுக்கொண்ட அரசியற்கட்சிகளும், அவற்றின் வேட்பாளர்களும், இவற்றை மார்ச் மாதம் 1ம் திகதிக்கு முன்னர் சமீபத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவேண்டும் என பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

மார்ச் மாதம் 1ம் திகதிக்குப் பின்னர் இவைகளை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட விதிகளுக்கிணங்க வழக்கு தொடரப்படும்.

அரசியற்கட்சிகளைச் சார்ந்தவர்கள் சொந்தப் பாதுகாப்பு கருதி ஆயுதங்களைத் தொடர்ந்து வைத்திருக்கவிரும்பினால் அந்த அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபரிடம் புதிதாக விண்ணப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய விண்ணப்பங்கள் எழுத்ததிகாரியைத் தலைவராகவும், அரசாங்க அதிபர் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை அங்கத்தவர்களாகக் கொண்டகுழுவினால் பரிசீலனை செய்யப்படும்.

மாவட்ட மட்டத்திலான இக்குழுவுக்கு இவ்விண்ணப்பங்களை நிராகரிக்கவோ, சிபாரிசு செய்யவோ அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அங்கீகாரத்துக்கென பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

## பதில் அதிபர்கள் நிரந்தர நியமனம்

(மன்னார்)

மன்னார்மாவட்ட பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுவோர் அனைவரும் விரைவில் நிரந்தர அதிபர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று மன்னார் கல்விப் பணிப்பாளர் திரு.ஆர்.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதற்கான சுற்று நிருபம் தமக்கு கிடைத்துள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 6 மாணவர் சித்தி

(உடுவில்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஆறுமாணவர் சித்தியடைந்துள்ளனர். பாடசாலை வரலாற்றில் மிகக்கூடுதலான மாணவர்கள் இம்முறை சித்தியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இவ் வைபவத்திற்கு இச் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெற்ற முன்னைநாள் அதிபர் திருமதி ஏ. இராஜரட்ணம் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார். விசேட விருந்தினராக யாழ்ப்பாண கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராஜா கலந்து கொள்வார். (12)

## சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆறு விக்கெட்டுகளால் வெற்றி அன்ரனிப்பிள்ளையின் அபாரப் பந்து வீச்சு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் கடந்தவாரம் நடைபெற்ற விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 69 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டி ஆரம்பக் கட்டத்தில் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் 4 விக்கெட்டுகளை இழந்திருந்தது. சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஆரம்பவேகப் பந்து வீச்சாளர் அன்ரனிப்பிள்ளை முதல் ஓவரிலேயே ஓட்டங்கள் ஏதும் கொடுக்காமல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஓர் புதிய சாதனையை ஏற்படுத்தினார். இவர் இப்போட்டியில் மொத்தம் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. அகிலன் 3 விக்கெட்டுக்களையும், இன்பசோதி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 101 ஓட்டங்களைப் பெற்றது விஜேந்திரா 22 ஓட்டங்களையும், ஜே பி. பாஸ்கரன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். ஏ. ஜே. ஆர். இன்பஜோதி 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே. பிரபாகரன் சிறப்பாக பந்துவீசி 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் யாழ். மத்திய கல்லூரி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 133 ஓட்டங்களைப் பெற்றது. நிச்மன 33 ஓட்டங்களையும், மகிந்தா 35 ஓட்டங்களையும், ஜெசீலன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். எம். என். ஜி. அன்ரனப்பிள்ளை 5 விக்கெட்டுகளையும். ஏ. ஐ ஆர். இன்பஜோதி 2 விக்கெட்டுக்களையும், அகிலன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 2-வது இன்னிங்ஸ் துடுப்பாட்டம், பார்வையாளர்களின் கண்களுக்கு பெரும் விருந்தாகவே அமைந்தது. இக்கோஷ்டியின் துடுப்பாட்டக்காரர்களான இன்பஜோதியும். விஜேந்திராவும் ஜோடி சேர்ந்து மின்னல் வேகத்தில் ஓட்டங்களைச் சேகரித்தது குறிப்பிடத்தக்கது. இன்பசோதி 36 ஓட்டங்களையும், விஜேந்திரா 25 ஓட்டங்களையும் பெற்றனர். பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களைப் பெற்றார். சென். பற்றிக்ஸ் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 102 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

## உதைபந்தாட்டம் மன்னார் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், இளைஞர் தெரிவுக் கோஷ்டிக்கும். மன்னார் உதைபந்தாட்ட லீக் இளைஞர் தெரிவக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் கோஷ்டி மிக இலகுவாக வெற்றிபெற்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையில் அகில இலங்கை இளைஞர் தெரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில், மேற்படி இரு கோஷ்டிகளும் கடந்த வாரம் மன்னார், ''சந்தகுரூஸ்'' விளையாட்டரங்கில் மோதியன.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மன்னார் கோஷ்டியின் ஆட்டம் சிறப்பாகவே இருந்தது. பருத்தித்துறைக் கோஷ்டியினர் இடைவேளைக்குப் பின்னர் கிடைத்த பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்களை இழந்தது குறிப்பிடத்தக்கது. ஆட்ட முடிவில் மன்னார் கோஷ்டி 10—0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார். (வி)

## ஈழத்து இசை நாடக வரலாறு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலைஞர் காரை. சுந்தரம்பிள்ளை எழுதிய 'ஈழத்து இசைநாடக வரலாறு' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் மூன்றும் திகதி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெறும் இவ் விழாவிற்கு திரு கே. குணராஜா (செங்கை ஆழியான்) தலைமைவகிப்பார் வெளியீட்டுரையை யாழ்ப்பாண நுண்கலைப்பீடாதிபதி பேராசிரியர் கா.சிவத்தம்பி நிகழ்த்துவார். ஆய்வுரைகளை திருவாளர்கள் க. சொக்கலிங்கம், அ. கனகசபாபதி ஆகியோர் வழங்கவுள்ளனர். இந்நூல்தலைசிறந்த இசை நாடகக் கலைஞர் எஸ். ரி கிட்டப்பா பாகவதர், எம். ஆர். கோவிந்தசாமிப்பிள்ளை, தியாகராஜபகவதர் தொடக்கம் நடிகமணி வைரமுத்து ஈறாக ஈழத்து இசைநாடகங்களில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளனர் என்பதை விளக்கியுள்ளது. (12)

## மெய்வல்லுநர் போட்டி

(வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் கிழமை வித்தியாலய அதிபர் திரு. சிவ வாகீசர் தலைமையில் நடைபெறவுள்ளது. பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக உதவிப் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் விளையாட்டுத்துறைக் கல்வி அதிகாரி திரு. கே. நாகமணி. வட்டுக்கோட்டை கொத்தணி நிர்வாக அதிபர் திரு. எஸ். டால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (139)

## சென்றல் - சென். ஜோன்ஸ் கிரிக்கெட் ஐந்துவருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலேயே மிகப்பெரிய கிரிக்கெட் போட்டியாக திகழும் 'சென்றல் - சென் ஜோன்ஸ் போட்டி இம்முறை மீண்டும் நடைபெறவிருக்கிறது.

கடந்த ஐந்து வருடங்களாக சில இடையூறுகள் காரணமாக நடைபெறாமல் இருந்து வந்த இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியை இம்முறை மிகச் சிறந்தமுறையில் நடாத்துவதற்காக, இரு கல்லூரிகளும் சேர்ந்து விசேட குழு ஒன்றை நியமித்துள்ளன. இக் குழு இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் தற்போதிருந்தே மேற்கொள்ள ஆரம்பிததுள்ளது.

இப்போட்டியை சிறந்த முறையில் நடத்துவதற்காகவே, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம், சீர்குலைந்த நிலையிலிருந்த யாழ். மத்திய கல்லூரி மைதானத்தை புனரமைப்புச் செய்து கொடுத்தது குறிப்பிடத்தக்கது. (வி)

## உயிருக்கும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

லுக்கோ கெட்டு சீரழிந்து விடுவதற்கோ வரவில்லை. இதனை எல்லோரும் அறிவார்கள். பெற்றோர்களும் நன்கு உணர்வார்கள்.

தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலை மாணவர்களுக்கு எதிரானவை அல்ல. பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் இடைப்பட்ட இடைவெளியை பூர்த்தி செய்யவே இயங்குகின்றன. வாழ்க்கைச் செலவு குறைந்த காலத்திலும் நான்கு பாடத்துக்கு எண்பது ரூபா கட்டணம்இன்றும் அதே நிலைதான். மாணவர்களுக்கு ஓய்வு அவசியம் தான். பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபட வேண்டும்தான். அதனையும் செய்துகொண்டு தனியார் கல்வி நிலையங்களின் சேவையைப் பெற்றுத்தான் தனது கல்வியைப் பூரணப் படுத்தலாம்என்பது உண்மை.

[நாளைய இதழில் யாழ்ப்பாணம் அர்ச் சம்பத்திரிசியார்கல்லூரி அதிபர் அதிவணக்கத்துக்குரிய ஜி. ஏ. ஜோசப் பிரான்சிஸ் அடிகளார் தனது கருத்தைக் கூறுகிறார்.](12)

## மன்னார் மாவட்டத்தில் விவசாய உதவித் திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாய இலாகா, கமநல சேவை நிலையங்கள் போன்றவற்றுடன் இணைந்து, மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வும் சங்கம் கடந்த காலபோகச் 89, 90 ம் ஆண்டில் 1000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விதை நெல், உபஉணவு விதைகள் போன்றவற்றை வழங்கியது. ஆனாலும் கடந்த வருடம் கிடைத்த குறைந்த மழை வீழ்ச்சியினாலும் குறுகிய மாத விதை நெல் தட்டுப்பாட்டினாலும், இம்மாவட்டத்தில் 40 வீத நெற்செய்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. தைமாதம் முதற் கிழமைகளில் எதிர்பாராமல் கிடைத்த மழைவீழ்ச்சியினால் இதைப் பயன்படுத்தி, துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கம் 1990ம் ஆண்டில் இடைப் போகம் செய்வதற்கு விவசாயிகளை ஊக்கப்படுத்தியது.

நிலத்தினதும் நீரினதும் உச்சப்பயனைப் பெறும் பொருட்டு, இச்சங்கம் சகல கமநல சேவை நிலையங்களுக்கும், கிராமிய மட்ட ஸ்தாபனங்களுக்கும் தேவையான உபஉணவு விதைகளையும், மரக்கறிவிதைகளையும் இலகு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. இதில் பாசிப்பயறு கௌப்பி. டுபாய் பூசனி, நிலக்கடலை, மரக்கறி விதைகள் போன்றன அடங்கும். மன்னார் மாவட்ட விவசாயிகள் தமக்குத்தேவையான விதைப் பொருள்களை இந்நிலையங்களில் பெற்றுக்கொள்ளுமாறு இச்சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

இச்சங்கம் 90ம் கல்வி ஆண்டில் தாய் தந்தையர் அற்ற பாடசாலை மாணவர்களுக்கும் ஏழைச் சிறுவர்களுக்கும் பாடசாலை உபகரணங்களையும் சீருடைகளையும் விநியோகிக்க இருக்கிறது.

## ஆசிரியர்களுக்கு பண்டிகைக்கால முற்பணம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகம், அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக்கால முற்பணம் ஆயிரம் ரூபாவை தமது பிரிவிலுள்ள ஆசிரியர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் வழங்க முன்வந்துள்ளது.

இந்த முற்பணத்தை பெற விரும்புபவர்கள் தத்தமது பிரிவு கொத்தணி அதிபர் ஊடாக நாளை முதலாம் திகதிக்கு முன்னர் பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும் என்று பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இது தொடர்பான சுற்றுநிருபம் இப் பிரிவைச் சேர்ந்த சகல கொத்தணி அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு - கிழக்கில்

# 105 பட்டதாரி ஆசிரியர்கள் நாளை முதல் நியமனம்

## பெயர்கள் அறிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு, கிழக்கு மாகாண அரசு 105 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கியுள்ளது. இவர்கள் மார்ச் மாதம் முதலாம் திகதி கடமைக்குச் செல்வர். மாகாண அரசானது நேரடியாக பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவது இதுவே முதல் தடவையாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரி ஆசிரியர்களாக யாழ். மாவட்டத்தில் இருந்து 84 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 6 பேரும், மன்னர், கிளிநொச்சி, திருமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா 4 பேரும், வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் அவரகளின் விபரம் வருமாறு:

### யாழ்ப்பாண மாவட்டம்

செல்விகள்: சாந்தினி கதிர்காமத்தம்பி (தெல்லிப்பளை), பி. மோகனும்பாள் (காரைநகர்), ஜே. சுப்பிரமணியம் (அரியாலை), ஆர். நவமணிதேவி (சாவகச்சேரி) எம். செல்வராணி (கோண்டாவில்) ராஜி வெங்கடேசசர்மா (சுன்னாகம்), இராஜேஸ்வரி வாரித்தம்பி (எழுதுமட்டுவாள்), மனோகரா கந்தையா (பளை) பாலாம்பிகை பாலசிங்கம் பளை (வரணி), சுகந்தகலா சிதம்பரநாதசர்மா (வட்டுக்கோட்டை), மல்லிகா வேலுப்பிள்ளை (கரவெட்டி), எச். எம். பாலேந்திரா (கொழும்புத்துறை), அல்விஸ் வசந்தராணி (காங்கேசன்துறை), ரி. லோகினிதேவி 'சண்டிலிப்பாய்), உஷன் மயில்வாகனம் (மானிப்பாய்), தர்சினி பாலசிங்கம் (மிருசுவில்), தமயந்தி ஐயாத்துறை (சுன்னாகம்), புவனேஸ்வரி வீரகத்திப்பிள்ளை (கரவெட்டி), மகாலட்சுமி செல்லத்துரை (சாவகச்சேரி), வரதலட்சுமி கார்த்திகேசு (நாவற்குழி), ராஜேஸ்வரி அம்பலவாணர் (மாவிட்டபுரம்), புஸ்பராஜேஸ்வரி நாகலிங்கம் (மீசாலை), சுந்தையா வள்ளிநாயகி (மீசாலை), வி. விமலா (கொடிகாமம்), அருணாசலம் சுசிலா (பருத்தித்துறை), கோபாலு குகனேஸ்வரி (நெடுந்தீவு) ஏ. எவ். ஜெனற் (நெடுந்தீவு) அனிதமாலா கந்தசாமி (ஏழாலை). கோமதி திருக்குமார் (கோப்பாய்), அப்பையாத்துரை பிரேமலதா (சாவகச்சேரி), புஸ்பமலர் சடையர் (அல்வாய்), பொன்னரசி பொன்னுத்துரை (அல்வால்), சிவ்லீலாதேவி வடிவேலு (புத்தூர்), சுமதி சதாசிவம் (பருத்தித்துறை), எஸ். நவநிதி (வட்டுக்கோட்டை) ரதினி சின்னத்துரை (அச்சுவேலி), நளாயினி வடிவேலு (சாவகச்சேரி). இன்பலதா சண்முகநாதன் (சுன்னாகம்), நடராஜா புஸ்பராணி (வேலணை), கண்சூரா முசிதீன் (யாழ்ப்பாணம்), வசந்தகௌரி கதிரேசு (திருநெல்வேலி), இரட்சியலட்சுமி சுப்பிரமணியக்குருக்கள் (உடுப்பிட்டி), சித்திராதேவி மாரிமுத்து (கரவெட்டி), எஸ். கார்த்திகேசு (அல்வாய்), சந்திரிகா கணேஸ் வல்வெட்டித்துறை), உஷாந்தினி கதிரவேல (கரவெட்டி), இந்திரராணி வல்லிபுரம் (அல்வாய்). முருகையா தெய்வமலர் அச்சுவேலி), சாரதாம்பாள் வீரசிங்கம் (காரைநகர்), யசோதா பரமநாதன் (மானிப்பாய்), செல்வரதி செல்வராஜா (சுன்னாகம்), ஜானகி கனகசபாபதி (கைதடி), ரஞ்சனு குமாரசாமி (குப்பிளான்), கீதா தம்பிராஜா(அச்சுவேலி) கலையரசி சின்னத்தம்பி (அச்சுவேலி), ரேகினி முத்துத்தம்பி (கோண்டாவில்), உமாதேவி தில்லையம்பலம் (கோப்பாய்)) ரி. சுபபிரமணியம் கந்தர்மடம்), ரி. தனுஜா (கோண்டாவில்), சாந்தினி மாணிசகவாசகம்(புலோலி) புஸ்பராணி வைத்திலிங்கம் (காங்கேசன் துறை) அரசக்கோன் பெற்ரோனிலா (யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி ராஜேந்திரம் (கொக்குவில்), செலவப்பா சிவனேஸ்வரி(மீசாலை], வாசுகி சிதம்பரநாதன் [தெல்லிப்பளை), சாந்தினி தம்பிராஜா (அளவெட்டி), பாக்கியலெட்சுமி கனகரெட்ணம் (கந்தர்மடம்], ஞானசுந்தரி சிவஞானப்பிள்ளை (சுன்னாகம்), காந்தவனம் அருணு(தெல்லிப்பளை), நர்மதா விஜயசேகரம் (பருத்தித்துறை), வசந்தா கணபதிப்பிள்ளை (கரவெட்டி), சுபாஜினி தம்பிராஜா (அளவெட்டி). திருமதி வதனரஞ்சி துரைசாமி (வல்வெட்டித்துறை), திருமதி பரமசுந்தரி ரவிக்குமார் (நல்லூர்), திருமதி விஜயகுமார் கமலவேணி [உரும்பராய்).

திருவாளர்கள்; கே. குணரெட்ணம் (சாவகச்சேரி), எஸ். மணிவண்ணன் (நீராவியடி), ரி. கலைச்செல்வன் (கரவெட்டி). கே. நாகேந்திரன் (கைதடி), ஜி. விஸ்ணுகுமார் வட்டுக்கோட்டை], அம்பலவாணர் லோகநாதன் (கைதடி), வேலுப்பிள்ளை வியாகமூர்த்தி (அல்வாய்), மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி (அல்வாய்), கந்தவனம் பரமநாதன் (பருத்தித்துறை).

### மட்டக்களப்பு மாவட்டம்

திருவாளர்கள் ஏ. ஐயாத்துரை (குருக்கள் மடம்), ஜே. சுந்தரலிங்கம் (பெரியகல்லாறு) கணபதிப்பிள்ளை பிரேம்குமார் (கல்லடி) செல்விகள் எஸ். இராஜலட்சுமி (இருதயபுரம்) வாசுகி மோகனசுந்தரம் (கல்லடி) திருமதி எஸ் தட்சாயினி (கல்லாறு)

### கிளிநொச்சி மாவட்டம்

செல்விகள் இராஜசோதி குமாரசாமி (வட்டக்கச்சி) சிவரஞ்சினி சின்னத்துரை (கனகாம்பிகைகுளம்) சுகந்தி பாலரட்ணம் (ஜெயந்திநகர்) ஜமுனராணி ஐயாத்துதைத் (யோகபுரம்)

### மன்னர் மாவட்டம்

செல்விகள்: பங்கிராஸ் மேரி அசம்ரா (மாந்தை). ஐ. மேரி அஞ்சலா (கற்கடந்தகுளம்), மேரி ஸ்டெலா அன்ரனி (பட்டித்தோட்டம்), அன்ரனி மரியகொறட்டி மிராண்டா (வங்காலை).

### வவுனியா மாவட்டம்

திரு. எஸ். திருச்செல்வநாதன் (செட்டிகுளம்).

### முல்லைத்தீவுமாவட்டம்

செல்வி விஞசித்தம்பி விக்னேஸ்வரி(முள்ளியவளை).

### திருகோணமலை மாவட்டம்

திருமதி ரேவதி சதாசிவம் (திருகோணமலை), திரு. ஈ. எஸ். யோகேஸ்வரன் (சேனையூர்). செல்விகள் சிவகௌரி மாணிக்கசபாபதி (திருகோணமலை) ரி மகாலெட்சுமி, (உவர்மலை).

### அம்பாறை மாவட்டம்

திரு. எஸ். மாதவன்பிள்ளை (அக்கரைப்பற்று).

## இலங்கை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அப்பகுதிகளை தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

''அந்நிய சக்திகள் வெளியேற வேண்டும் என்று கூறியதற்காக என்னைக் கொலை செய்யச் சதி தீட்டப்படுகிறது. நான் இறந்தாலும் மக்கள் உண்மை உணரவேண்டும்.

''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பார்கள். எனவே ஒற்றுமையாக யாவரும்செயல் படுவோம். இதனல் அந்நிய சக்திகள் எம்மை ஆட்டிப் படைக்கும் செயலிலிருந்து தப்பலாம்.

''வானத்தில் பறக்கும் இரண்டு புருக்களிலும்பார்க்க கையிலுள்ள ஒரு புரு போதும் என்ற மனஉறுதியுடன் யாவரும் ஒற்றுமையாக செயற்பட்டால் இந்த அவசரகாலச் சட்டநீடிப்பேஅவசியமில்லை'',

[பூ]

ஹவுஸ் புல்!!!
ஹரன் யாழ்.
10-30, 2-30, 4-30, 6-30
கமலஹாசன்
சரண்யா
நாயகன்

## மந்திகையில் மீண்டும்'தபாலகம்

(பருத்தித்துறை]

புலோலி தபாற் கந்தோர் மீண்டும் மந்திகையில் முன் இயங்கி வந்த கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

புலோலி மேற்கு கிராமக் கோட்டடியில் இயங்கி வந்த புலோலி தபால் கந்தோர் புலோலி இந்திய இராணுவம் வெளியேறியதையடுத்து மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

## அதிபராக நியமனம்

(அச்சுவேலி)

புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரியின் அதிபராக திரு. வி. சந்திரசேகரம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் உதவி ஆசிரியராகவும் உபஅதிபராகவும் கடமையாற்றி வந்த இவர் பதவி உயர்த்தப்பட்டு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் இவர் இக்கல்லூரியின் பழைய மாணவனுமாவார்.

## மாணவர்களுக்கு தையல்பாடம்

[உடுவில்]

ஆண்டு 3 முதல் 6 வரையான மாணவர்களுக்கு ஆக்கத்திறன் கல்வியில் தையல் பாடம் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளது.

ஏழாம் ஆண்டு மாணவர்கள் வாழ்க்கைத் திறன் கல்வியை கற்பதனுல், ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு தையல் பாடம் கற்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# புலிகள் - அமைச்சர் ஹமீத் மட்டுநகரில் நேற்றுப் பேச்சு

## இன்று புளொட்டை சந்திப்பார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் நேற்று மட்டக்களப்பில் முக்கிய விடயங்கள் குறித்து பேச்சுக்கள் நடத்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பேச்சுக்களில் முஸ்லிம் அரசியல், மத, சமூக பிரமுகர்களும் கலந்துகொண்டதாகவும் பேச்சுக்கள் மட்டுநகரிலுள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்தில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை அமைச்சர் ஹமீத் இன்று கொழும்பில் 'புளொட்'இயக்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார். இதைத்தொடர்ந்து அவர் ஈ. பி ஆர். எல். எவ்., ஈ. என். டி எல். எவ்., ரெலோ, விடுதலைப் புலிகளுடனும் தனித்தனியாக பேச்சுக்கள் நடத்தவுள்ளார். (சி)

# கடல் அரிப்பால் கீரிமலை பாதிப்பு!

(இளவாலை)

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை, கடல் அரிப்பால் அழிந்துவருவதாக புகார்செய்யப்படுகிறது.

கடல் அரிப்பைத் தடுப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முனனர் போடப்பட்ட அணை உடைந்துவிட்டது. இதன் விளைவாக மேற்பரப்பில் நிரப்பப்பட்ட மணல் கடல் அலைகளினுலும் மழைவெள்ளத்தாலும் அரித்துச் செல்லப்படுகிறது.

அணைக்கட்டுகளைத் திருத்தி அமைக்காவிட்டால் அப் பகுதியே அழிந்துவிடும்நிலைதான் ஏற்படும் என்று கவலைதெரிவிக்கப்படுகிறது.

இதேநேரத்தில் கீரிமலைக் கேணிக்கு நீராட வருபவர்கள் பொருள்களை பாதுகாப்பாக வைப்பதற்கும் உடைகளை மாற்றுவதற்குமாக பல அறை வசதிகள் கொண்ட மண்டபம் அமைக்கப்பட்டிருந்தும் இம் மண்டபம் சில ஆண்டுகளாக பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது, (138)

## மருதனுமடம் கோட்டப் பிரிவில்

# புதிய நியமனங்கள் இல்லை

(உடுவில்)

வசதிகள் சேவைகள் கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியில் தற்காலிக ஆசிரியர் நியமனம், லிகிதர் நியமனம் ஆகியன 199[illegible]-ம் ஆண்டில் புதிதாக எதுவும் செய்யப்படமாட்டாது என மருதனுமடம் கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே, குலசேகரன் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

சென்ற ஆண்டு நியமிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர்கள், தற்காலிக லிகிதர்கள் விண்ணப்பங்கள் மட்டும் இவ்வாண்டு புதுப்பிக்கப்படும்.

தற்காலிக ஆசிரியர் நியமனம் புதுப்பித்தல் விண்ணப்பம் அனுப்பும்போது மாணவர் தொகை, சுற்றறிக்கையின்படி தேவையான ஆசிரியர்கள் தொகை, தற்போதுள்ள ஆசிரியர் தொகை, பற்ருக்குறை மேலதிக ஆசிரியர் ஆகிய விபரங்களை குறித்து அனுப்புமாறு அதிபர்களை திரு. குலசேகரன் கேட்டுள்ளார்.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு

# நிரந்தர நியமனம்

[கொழும்பு]

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதறகாக கல்விச் சேவைகள் ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

தொண்டர் ஆகிரியர்களாக ஒரு வருடத்திற்கு மேல் கடமையாற்றியவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் இம் மாதம் 22-ந் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தோட்டப் பாடசாலைகளுக்கு ஆயிரம் ஆசிரியர்சுள் நியமிக்கப்படவுள்ளனர். 1988ம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சை பின்படி இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(சி)

## மின்விநியோகம்

[அச்சுவேலி]

அச்சுவேலி உபமின்சார நிலைய சீர்திருத்தி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அச்சுவேலிப் பகுதிக்கான மின்சார விநியோகம் சீராக நடைபெறுகிறது.

அச்சுவேலிப் பகுதிக்கான உபமின்சார நிலையம் கடந்த வாரம் பழுதடைந்தது. இதனுல் சிலதினங்கள் மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது. இலங்கை மின்சாரசபை அதிகாரிகளும் வலி-கிழக்கு பிரதேசசபை அச்சுவேலி உபஅலுவலக அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட துரித நடவடிக்கையினுல் உபமின்சார நிலையம் திருத்தி] அமைக்கப்பட்டது.

அச்சுவேலிப்பகுதியில் நடைபெறும் சட்டவிரோத மின்சாரப்பாவனையால் ஏற்பட்ட உயர்மின் அழுத்தமே உபமின்சார நிலையம் பழுதடையக் காரணம்என்றும் இதனுல் பல லட்சம் ரூபா நஷ்டம் என்றும் இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (74)

## ஆலயம் புனரமைப்பு

(இளவாலை)

இளவாலையின் மிகவும் பழமைவாய்ந்த ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது. (138)

## யாழ். மாவட்டத்தில்
## கடற்றொழில் சங்கங்களை பதிவுசெய்ய
# திணைக்களம் மறுக்கிறதாம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் திணைக்களத்தால் கிராமிய மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 64 கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்கு, கூட்டுறவுத் திணைக்களம் மறுத்துவருவதாகப் புகார் செய்யப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு அமைச்சினுல் கிடைக்கவிருக்கும் பல்வேறு உதவிகளும் இதனுல் தடைப்பட்டுள்ளன என்றும், சகல உதவிகளையும் அமைச்சு கிராமியக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களால் நடைமுறைப்படுத்தி வருவதால் இந்நெருக்கடி தோன்றியிருப்பதாகவும் யாழ். மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு. ஏ. ரி. சிவஞானம் தெரிவித்தார்.

சகல மாவட்டங்களிலும் கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கம் போதிய வசதிகளை வழங்கியுள்ளது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவித வசதிகளும் கிடைக்கவில்லை.

''இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய கடற்றொழில் அகதிகளுக்கு 40 கண்ணாடி இழைப் படகுகளை, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் வழங்கவுள்ளது. இப்படகுகள் சீ-நோர் படகு கட்டும் தொழிற்சாலையில் வடிவமைக்கப்பட்டு வருகின்றன'' என்றும் திரு. சிவஞானம் தெரிவித்தார். (12)

### நெடுமாறன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் வீதியிலுள்ள புலிகள் பணிமனையில் நடைபெற்றது. ஒவ்வொரு தாய்மாரையும் அழைத்து விபரங்களை சேகரித்ததுடன், ஆறுதலும் கூறினர். (12)

### இன்று நடைபெறும் உடற் பயிற்சிப் போட்டி

(உடுவில்)

உடுவில் கொத்தணிப் பாடசாலைகளின் உடற் பயிற்சிப் போட்டிகள், இன்று 28ம் திகதி மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் கொத்தணி அதிபர் திருமதி எஸ். எஸ். குமாரசாமி தலைமையில் நடைபெறுகிறது.

19 வயதுப் பிரிவு ஆண்களும், 13, 17, 19 வயதுப் பிரிவுப் பெண்களும் இப்போட்டியில் பங்குகொள்கின்றனர்.

போட்டிகளில் இராமநாதன் கல்லூரி, இணுவில் சைவ மகாஜன, இணுவில் சைவப் பிரகாச மகா வித்தியாலயம், உடுவில் முருகமூர்த்தி, இணுவில் அ. மி. த. க. பாடசாலைகள் ஆகியன பங்குபற்றுகின்றன. உடுவில் கொத்தணிக்கான மெய்வல்லுநர் போட்டிகள், மார்ச் 2ம் திகதி இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளன.

## வடக்கு, கிழக்கில்
# செஞ்சிலுவைச் சங்க பிராந்திய அலுவலகங்கள்

(மட்டக்களப்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்திய அலுவலகங்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட இருக்கின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வட பிராந்திய அலுவலகம் கிளிநொச்சியிலும் கிழக்குப் பிராந்திய அலுவலகம் திருகோணமலையிலும் அமைக்கப்பட உள்ளதாக மட்டக்களப்பிற்கு விஜயஞ்செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரணப் பணிகளை நேரடியாக மேற்கொள்வதற்காகவே இந்த அலுவலகங்கள் அமைக்கப்படவருக்கின்றன.

மட்டக்களப்பிற்கு விஜயஞ் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. எஸ். கரிகாலன், மட்டக்களப்பு-திருமலை மறைமாவட்ட ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை உட்படப் பல பிரமுகர்களையும் சந்தித்து உரையாடியதுடன், பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர். (121)

### மட்டக்களப்பு அன்னையர் முன்னணி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த திருமதி பூபதி கணபதிப்பிள்ளையின் ஈராண்டு நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளை அன்னையர் முன்னணி மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ள அண்மையில் அன்னை பூபதி நினைவு பணிமன்ற ஞாபகார்த்தக் குழு ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு ஆசிரியகலாசாலை மண்டபத்தில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி பிரதித்தலைவர் திரு. எஸ். கரிகாலனும் கலந்துகொண்டார்.

அன்னை பூபதி கணபதிப்பிள்ளை 1987 மார்ச் 13-ம் திகதி தனது உண்ணா விரதத்தை ஆரம்பித்து ஏப்ரல் 14-ந் திகதி உயிர்நீத்தமை குறிப்பிடத்தக்கது. (121)

# மரண அறிவித்தல்

### செல்லப்பா இராசரத்தினம்

(இளைப்பாறிய சிறுப்பர்)

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த செல்லப்பா இராசரத்தினம் 26-02-90 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி பாக்கியவதி அவர்களின் அன்புக் கணவரும், பத்மாவதி, இராஜலிங்கம் (நியூ லங்கா அலுமேனிய தொழிலகம்), ஜெயவதி, திலகவதி, விக்னராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெகந்நாதன் (இளைப்பாறிய சிறுப்பர்), சத்தியபாமா, காலஞ்சென்ற சண்முகநாதன் (இளைப்பாறிய ஏயர்போஸ்), பத்மநாதன் (தோட்டத் தொழில் மாவட்ட அதிகாரி), மாகிரெட் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (28-02-90) புதன்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு, டம்பலப்பிட்டி 32, கில்பெட் ரோட்டிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- T. சத்தியநாதன்,
50, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-574)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100300/81. Eelanadu P O. Box No. 49. Telegram; Eelanadu. Telephone: 2291,

### இந்திய அமைதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் புதிய சூழ்நிலையில் இடம்பெற்று வருகின்றன. விடுதலைப் புலிகள், தமிழ் ஈழமக்களின் முழுமையான ஆதரவைப் பெற்றுள்ளார்கள் என்ற நிலையில், வல்லமை வாய்ந்த ஓர் சூழ்நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பேச்சுவார்த்தைகள் இந்திய அமைதிப்படையை இலங்கையில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்றகோரிக்கையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

#### இந்தியாவும் அங்கீகரிக்கும்

'பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்துள்ள அரபுநாடுகள், அந்த நாட்டு மக்களின் அபிமானத்தைப் பெற்றதாலேதான் நிறைவேற்ற முடிந்தது. தமிழ் ஈழப் போராட்டத்தை உலக நாடுகளும் அங்கீகரிக்கும காலம் வரும் போது நிச்சயமாக இந்தியாவும் அங்கீகரிக்கத்தான் செய்யும். அந்த வகையில் ஈழப்பிரச்னையை இந்தியாவும், இந்திய மக்களும் நன்கறிவார்கள். இதற்கு உங்கள் போராட்டம் பற்றி உலக நாடுகளில் விரிவான பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

#### ஆக்கிரமிப்புப் படையாக வந்தது

''நான் இங்குவந்து இந்திய அமைதிப்படை செய்த அட்டூழியங்களை நேரில் பார்த்தபோது மகாத்மாகாந்தி அவதரித்த இந்திய புனித மண்ணில் இருந்து இலங்கைத் தமிழரைப் பாதுகாக்க வந்த இந்திய அமைதிப் படையா இதனைச் செய்தது என்று வெட்கித் தலைகுனிந்தேன். ஒருநாகரிக நாட்டின் இராணுவம் உலகின் எந்த நாடுகளிலும் இம்மாதிரியான கொடுமைகளை அயல்நாடுகளில் செய்ததில்லை. அமைதிப்படையாக வந்தவர்கள் ஆக்கிரமிப்புப் படையாகவே செயல்பட்டிருக்கிருர்கள். இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த முப்பத்தி நாலு மாதங்கள் ஈழத்தமிழருக்கு இழைத்த கொடுமைகளைப் பற்றிய தகவல்களை சகல பகுதிகளுக்கும் சென்று திரட்டி வருகின்றேன். இதனை இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் விரைவில் வெளிப்படுததுவேன்.

#### வி. பி. சிங் முன்னரே கண்டித்தார்

இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங், பிரதமர் ஆவதற்கு முன்னர் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது தவறெனக் கண்டித்தார். முன்னுள் பிரதமர் ராஜீவ்காந்தி இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பியது தமிழ்ஈழ அமைப்புக்களுடனும், தமிழ் மக்களுடனும் ஆலோசிக்காது எடுக்கப்பட்ட முடிவாகும். இந்தியப்படை முற்ருக இலங்கையிலிருந்து வெளியேறினுல்தான், தமிழ் ஈழமக்களது பிரச்னைக்கு நல்ல முடிவுகாண முடியும் என்று இந்தியப் பிரதமர் கருதுகின்ருர்.

#### விடுதலை உணர்வுக்கு தலைவணங்குகிறேன்

''தமிழ் ஈழமக்கள் இந்திய அமைதி படையின் கொடுமைகளுக்குஆளானபோதும், இழப்புக்களைச் சந்திக்கிறபோதும் மனஉறுதியோடு தேச விடுதலைக்காக தோளோடு தோள் நின்று போராடியதால் இன்று இந்தியப் படையை இம்மண்ணில் இருந்து அகற்ற அவர்களால் முடிந்தது. இதற்கு அவர்களது தியாகமும் வீரமும் துணைபுரிந்தன. அந்த மக்களது விடுதலை உணர்வுகளுக்கு நான் தலைவணங்குகிறேன்'' என்று திரு. பா. நெடுமாறன் தெரிவித்தார். (12)

### மதிய உணவுப் பணிப்பாளர் விஜயம்

(மட்டக்களப்பு)

கல்வி அமைச்சின் மதிய உணவுப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவை நேரில் பார்வை யிட்டார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு கே சோமசுந்தரம் தலைமையில் மகாநாடொன்று நடைபெற்றது.

இம்மகாநாட்டில் மதிய உணவுத்திட்டத்தை எவ்வாறு சிறப்பாக செயல் படுத்துவது என்பது பற்றியும், இத்திட்டத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்னைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றியும் அதிகாரிகளுக்கு திரு. சுபாநாயகம் விளக்கிக் கூறினர்.

கூடுமானவரை உள்ளூர் உற்பத்திப் பொருள்களை கொண்டே உணவுப்பண்டங்களைத் தயாரிக்குமாறு பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுக்கொண்டார். (121)

### தமிழீழ ஆய்வு

(1ம பக்கத் தொடர்ச்சி)

தில்கொண்டு உறுதியான அபிவிருத்தியை ஏற்படுத்தவும் நவீன விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் எப்படிப் பயன்படுத்த வேண்டும் எனவும் இம்மாநாடு ஆராயவுள்ளது.

அடித்தள பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டுள்ள திட்டமிடயியலாளர்கள், உதவிவழங்கும் நிறுவனங்கள், ஆய்வாளர்கள் ஆகியோர் இம்மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உறுதியான அரசியலைக் கொண்டுவரவும் அர்த்தமுள்ள, பயனுள்ள திட்டங்களை இம்மாநாடு உருவாக்கும் என்றும் மாநாட்டு அமைப்பாளர்கள் தெரிவித்தனர். [து]

### ஐ. நா. அதிகாரிகள் யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த ஜெனிவா நாட்டு அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களுக்கு விஜயம் செய்துள்ளனர்.

கமநலச் சேவை நிலையத்தினர் ஊடாக நிறைவேற்றப்பட்ட மாதா கோவில் மண்டைதீவு வீதியும், சீநோர், மற்றும் கொட்டடியில் உள்ள 15 ஆயிரம் ரூபா உதவியினுல் கட்டப்பட்ட வீடுகள், திருநெல்வேலி கிணறு திருத்த வேலைகளையும் இவர்கள் பார்வையிட்டனர்.

மண்டைதீவில் வெள்ளத் தடுப்பு அணை கட்டுவதற்கு 1990-ம் ஆண்டுக்கு கூடிய நிதி உதவி அளிக்குமாறு கமநலச் சேவைத் திணைக்களத்தினர் ஐ. நா. அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். [ம]

### வீதி தடைகள் அகற்றம்

(நெல்லியடி)

நெல்லியடிப் பகுதியில் இந்தியப் படையினரால் அமைக்கப்பட்டிருந்த காவலரன்கள், வீதித்தடைகள் முதலானவற்றை அகற்றும் நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

தடைகளை அகற்றும் பணிக்கு பெருந்தொகையான பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்பு நல்கிவருகின்ருர்கள். (55)

### மக்கள் வங்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டாம் கட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கடந்த சனிக்கிழமை 24-ந் திகதி மேற்படி பணத்தைப் பெறத்தவறிய வேலணை, கரயபன், தீவுதெற்கு, நாரந்தனை ஆகிய இடங்களிலுள்ளவர்களும் தமக்குரிய 2-ம் கட்ட கொடுப்பனவுகளை மேற்குறித்த திகதியில் பெற்றுக் கொள்ளலாம். (து)

### அப்பியாசக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1988ம் ஆண்டில் காகித உற்பத்தி 4124 மெற்றிக் தொன். 1989ம் ஆண்டில் 2750 மெற்றிக்தொன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாண்டில் கடந்த இரு மாதங்களில் 192 மெற்றிக்தொன் உற்பத்தி செய்யப்பட்டது.

நாட்டில் நிலைமை சுமுகமாக இருந்நால் இவ்வாண்டில் உற்பத்தி பெருகும் எனவும், நாட்டிற்குத் தேவையான அப்பியாசக்கொப்பிகளை உற்பத்தி செய்யமுடியும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார் [121]

### அகில இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொழித் தினத்தைக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

தமிழ்மொழித் தினம் இவ்வருடம் மே 8ம் திகதி கொழும்பில் நடாத்தப்படுமெனச் சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவைக் கல்வி இராஜாங்க அமைச்சின் தமிழ்ப் பிரிவும், இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் தமிழ்பிரிவும் சேர்ந்து கூட்டாக நடாத்த உள்ளன.

தமிழ்மொழித்தின போட்டிகள் பாடசாலை, கொத்தணி, கோட்டம், மாவட்டம், மாகாணம் என்ற ஐந்து நிலைகளில் நடாத்தி தேசிய மட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன வென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம்பிரிவு ஆண்டு 4, 5, இரண்டாம் பிரிவு ஆண்டு 6, 7, 8, மூன்ரும் பிரிவு ஆண்டு 9, 10, 11, நான்காம்பிரிவு ஆண்டு 12, 13 என பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறும்.

வாசிப்பு, ஆக்கம், நடனம், இசை, விவாதம் எழுத்து, பா ஓதல், பேச்சு, நாடகம், சொல்வதெழுதல் ஆகியவற்றில் போட்டிகள் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org